Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-1147)

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 4 (05.07.2003) சனிக்கிழமை இதழ்: 276

## அதிகாரத்தைப் பயன்படுத்த பின்நிற்கப் போவதில்லை!

### மீண்டும் எச்சரிக்கிறார் ஜனாதிபதி

நாட்டிற்குத் தேவையேற்படும்போது, தமது நிறைவேற்று அதிகாரத்தைப் பிரயோகிப்பதில் பின்நிற்கப் போவதில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட ஐந்து மாடிக் கட்டடத்தை நேற்றுமுன்தினம் திறந்துவைத்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன தயாரித்த யாப்பு, வரையறையற்ற அதிகாரத்தைத் தந்துள்ளது என்றும், அப்போது அவர் குறிப்பிட்டார்.

## பரந்தன் ராஜனை புதுடெல்கியில் ஜப்பானிய பிரதித் தூதுவர் சந்திப்பு

### இரகசியமாக நடந்தது பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இந்தியாவில் தங்கியிருக்கும் முன்னாள் போராளி இயக்கம் ஒன்றின் தலைவரை, ஜப்பானிய அரசின் பிரதிநிதி ஒருவர் நேற்றுச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நேற்றுக்காலை நடைபெற்ற மேற்படி திடீர் சந்திப்பின்போது, வடக்கு - கிழக்குப் பகுதியின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக, விரிவான முறையில் ஆராயப்பட்டிருக்கிறது.

ஜப்பானிய அரசின் பிரதிநிதியாக, இந்தியாவுக்கான ஜப்பான் நாட்டின் பிரதித் தூதுவர் இச்சந்திப்பில் பங்குபற்றினார்.

மேற்படி சந்திப்புக்கான முழு ஏற்பாடுகளையும், இவரே மேற்கொண்டிருந்தார்.

வடபகுதியில் செயற்பட்ட முன்னாள் போராளிக் குழுக்களில் ஒன்றாகிய - ஈ.என்.டி.எல்.எவ் என்று அழைக்கப்பட்ட ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் தலைவராகிய பரந்தன் ராஜன் என்பவருடனேயே, இத்திடீர் சந்திப்பு

(10 ஆம் பக்கம் பார்க்க)

### இடைக்கால நிர்வாகம்; பிரதமர் - அமைச்சர்கள் ஆலோசனை!

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகசபையை ஏற்படுத்துவது தொடர்பாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்களுடன் கலந்தாலோசிக்கவுள்ளார்.


இதற்கான சந்திப்பு விரைவில் நடைபெறும் எனத் தெரியவருகிறது. அடுத்த வாரமளவில், இந்த இடைக்கால நிர்வாகசபை தொடர்பான யோசனைகளை விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்கு நடவடிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இன்று கரும்புலிகள் நாள்; எங்கும் எழுச்சி நிகழ்வுகள்!

## பாடசாலை அதிபரின் வாகனம் விஷமிகளால் எரிக்கப்பட்டது!

### எதிர்த்து மாணவர்கள் வீதிமறியல்



மறியல் நடத்தும் மாணவர்கள், உள்ளே - எரிக்கப்பட்ட கார்

புனித சாள்ஸ் மகா வித்தியாலய அதிபரின் கார், நேற்று முன்தினமிரவு விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டது.

பாடசாலையின் அதிபர் திருமதி சின்னத்துரையின் வீட்டில் வைத்தே, அவரின் கார் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

கார் முற்றாக எரிந்து, இரும்புத் த்கரங்கள் மட்டுமே எஞ்சியிருந்தன. இது குறித்து - யாழ்.பொலிஸ் நிலையத்திலும், விடுதலைப் புலிகளிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை - அதிபரின் கார் தீக்கிரை (10 ஆம் பக்கம் பார்க்க)

## கோட்ட ரீதியில் சிறப்பு ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

**தாயக விடுதலைக்காக தம் இன்னுயிர்களைத் தியாகம் செய்த கரும்புலி வீரர்களை நினைவுகூருமுகமாகவும், அவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாகவும், இன்று தமிழர் தாயகப் பகுதியெங்கும் 'கரும்புலிகள் நாள்' மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பபடுகின்றது.**

இன்றைய கரும்புலிகள் நாள் நிகழ்வையொட்டி யாழ்.குடாநாடு உட்பட வட - கிழக்கு அனைத்துப் பகுதியிலும் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

கடந்த வாரத்தின் ஆரம்பத்தில் இருந்தே, வட - கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் கரும்புலிகள் நாள் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

போராட்ட வரலாற்றில் முதலாவது கரும்புலி வீரன் கப்டன் மில்லர், தனது இன்னுயிரைத் தியாகம் செய்த தினமான இன்றைய தினத்தில் - நெல்லியடி மத்திய கல்லூரியில் விசேட நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதேபோல - குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும், கோட்ட மட்டத்திலான கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

வன்னிப் பகுதியின் அனைத்துப் பகுதிகளிலும், கரும்புலிகள் நாளையொட்டி மிகவும் உணர்வெழுச்சியுடனான நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அஞ்சலிக் கூட்டங்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### புளொட் உறுப்பினர் மட்டக்களப்பில் கொலை

மட்டக்களப்பு நகரில் புளொட் இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மட்டு. ஆஸ்பத்திரி வீதியிலுள்ள புளொட் அலுவலகத்திலிருந்து, நேற்று மாலை சைக்கிளில் தமது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போதே -திமிலைத்தீவு பால் சேகரிப்பு நிலையத்துக்கருகில் வைத்து இவர் சுட்டுக்கொல்லப்பட்டதாக மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலின் சமாதான முயற்சிக்கு ஐ.தே.க மாநாட்டில் முழு ஆதரவு

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் முகமாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எடுத்துவரும் சமாதான முன்னெடுப்புகளுக்கு, நேற்று எம்பிலிப்பிட்டியவில் நடந்த ஐ.தே.கவின் பேராளர் மாநாட்டில் பூரணஆதரவு தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் பல்வேறு பகுதியையும் சேர்ந்த மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பேராளர்கள், இந்த நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

இடுக்கண், தடைகள் எதுவந்தாலும் சமாதான முன்னெடுப்புக்களை, தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

ஐ.தே.கவின் தேசிய நிறைவேற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## போராளி சத்தியராஜ் பிணையில் விடுதலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, கடந்த மூன்று வாரங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு திமிலைத்தீவுப் பிரதேச விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சத்தியராஜை பிணையில் விடுமாறு, திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண உயர்நீதிமன்ற அமர்வின்போது, நேற்று பணிப்புரை விடுக்கப்பட்டது.

சத்தியராஜை 10 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், இரண்டு நபர்கள் சார்பில் ஒவ்வொருவரும் 50 ஆயிரம் ரூபா சரீரப்பிணையிலும் விடுவிப்பதாக நீதிமன்றின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(07)

### விண்ணாணம் விநாசியர்



மா்ம விஜயமும் இரகசியச் சந்திப்புமா அமளிப்படுகுது டெல்கி...

## நோர்வே தூதுவர் வெஸ்பேர்க்குடன் சம்பந்தன் எம்.பி. சந்தித்துப் பேச்சு!

(கொழும்பு)

நோர்வேயின் விசேட தூதுவர் வெஸ்பேர்க்கை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற இச் சந்திப்பின்போது, வட-கிழக்கில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்படுவதன் அவசியம் குறித்தும், சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

அதேவேளை- இலங்கைக்கான கனடா நாட்டின் தூதுவரையும் இரா.சம்பந்தன் சந்தித்து உரையாடியுள்ளார்.

Expo Aviation (Pvt) Ltd.
EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -975)

## கரும்புலிகள் நினைவு நாளையொட்டிய

# விளையாட்டுப்போட்டி நெடுந்தீவில் நிறைவு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு விளையாட்டுக் கழகங்களின் சமாசம், கரும்புலிகள் நினைவு நாளை முன்னிட்டு, கடந்த ஒருமாதகாலமாக நடாத்தி வந்த மாபெரும் விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்றுமுன் தினம் வெகு சிறப்பாக இடம்பெற்றன.

மாலை 2.30 மணிக்கு குதிரை ஓட்டப் போட்டியுடன் இறுதிநாள் நிகழ்வுகள் ஆரம்பமாகின. இந்த நிகழ்வில் - தமிழீழ தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து விளையாட்டுக்கழக மற்றும் சமாசக் கொடிகளை அவற்றின் தலைவர்கள் ஏற்றிவைத்தனர்.

பொதுச்சுடரினை போராளி ஒருவரின் தந்தை ஏற்றிவைத்தார்.

கரும்புலிகள் நினைவுருவப் படத்திற்கான சுடரினை நெடுந்தீவைச் சேர்ந்த கடற் கரும்புலி பூங்குழலியின் சகோதரி சா.சகாயமலரும், யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளனும் ஏற்றிவைத்தனர்.

இறுதிநாள் நிகழ்வுகளாக - கைக்கொடிச் சவாரி, தலையணைச் சண்டை மற்றும் வயோதிபர் ஓட்டம், கயிறுழுத்தல் ஆகிய நிகழ்வுகளுடன், சிறப்பு சிநேகபூர்வ ஆட்டமாக வன்னி லக்கி ஸ்ரார் அணிக்கும் நெடுந்தீவு அணிகளுக்குமிடையிலான உதைபந்தாட்டப் போட்டியும் நடைபெற்றது. இதில், லக்கி ஸ்ரார் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த விளையாட்டு நிகழ்வுகளில் - புள்ளிகளின் அடிப்படையில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் இடங்களை முறையே- சென். அன்ரனீஸ், உதயசூரியன், சென். ஜோன்ஸ் விளையாட்டுக்கழகங்கள் பெற்றன.

(113)

## சிற்றூழியர் போராட்டம் முடிவுக்கு வந்தது!

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் சிற்றூழியர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

சுகாதார அமைச்சருடன், அகில இலங்கைச் சுபசேவைச் சங்கம் நேற்று மாலை நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே, நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

வைத்தியசாலை சிற்றூழியர்களின் கோரிக்கைக்கான தீர்வுகள் அரசினால் முன்வைக்கப்பட்டதாக, சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன தெரிவித்தார்.

(01)

## குருநாகல் பஸ் விபத்தில் 11 பேர் பலி!

(கொழும்பு)

குருநாகல் - பொக்கல எனும் பகுதியில், பஸ் வண்டியொன்று பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் 11 பேர் பலியாகினர்.

மேலும், 50 பயணிகள் காயமடைந்தனர்.

## தற்கொடையாம் கரும்புலியைப் பாடு!

கரும்புலிகளின் மனத்துணிவைத் தியாகத்தைப் போற்றிடவே
கருத்துடனே பாடுவதென் பணி!

* * *

தமிழ் மண்ணை மீட்டிடவும், தமிழாட்சி நாட்டிடவும்
தற்கொடையாம் கரும்புலியைப் பாடு!

* * *

கப்பல் பல அமிழ்ந்திடவும் முகாம்கள் பல தகர்ந்திடவும்
காரணமே கரும்புலிகள்தான்!

* * *

தருக்கர் முகாம் தகர்ந்திடுமே தமிழர்பகை மறைந்திடுமே
கரும்புலியின் பெயரோதக் கேட்டே!

* * *

கரும்புலியாய் நெல்லியடிப் படைமுகாம் தகர்த்த முதற்
கரும்புலியாம் மில்லர் புகழ் பாடு!

* * *

மாங்குளம்படை முகாமுள்ளே கரும்புலியாய்ப் புகுந்தழித்த
'போர்க்'கினது தியாகத்தைப் போற்று!

* * *

எக்கொடைக்கும் இணையுண்டு. இணையில்லா கரும்புலியின்
தற்கொடையே தலையென்று பாடு!

* * *

தன்னுடம்பில் குண்டுகட்டிப் பகையழிக்கும் கரும்புலியின்
தற்கொடையைப் பாட மொழி யேது?

* * *

"கரும்புலியாய்க் களம்புகுந்து பகையழித்தல் எம்பிறப்பின்
பெரும்பேறு" என்பவரைப் போற்று!

* * *

மரணத்தை அரவணைக்கும் கரும்புலியின் முறைகண்டு
மரணமே மரணித்துப் போ(கு)ம்!

* * *

கரும்புலியின் (வி) வேகத்துடன் மனத்துணிவு தியாகத்தையும்
காசினியோர் வியக்கின்றார் நின்று!

* * *

வருடம் தோறும் ஜூலை ஐந்தில் கரும்புலியைப் போற்றுதற்குக்
கருத்தினிலே இருத்துவதெம் கடன்!

-வயலூர் முருகன்-


# சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்

# கேள்வி அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் 18.07.2003 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் நிர்மாணப் பயிற்சி நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்" என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டிதெரு, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் எதிர்வரும் 18.07.2003 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ, பதிவுத்தபால் மூலமோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

| வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | VAT 20% |
|---|---|---|---|
| 1. கொடிகாமம் காளிகோவில் வீதி புனரமைப்பு | 2500.00 | 500.00 | 100.00 |
| 2. கொடிகாமம் தேங்காய்க்கடை நிலத்தளம் அமைத்தல் | 1500.00 | 500.00 | 100.00 |
| 3. சரசாலை உப அலுவலக கேற் எல்லைச்சுவர் திருத்தமும் தாய் சேய் நிலையக் கட்டடத் திருத்தமும் | 750.00 | 250.00 | 50.00 |
| 4. கொடிகாமம் மீன்சந்தைக்கு தீந்தை பூசுதல் | 750.00 | 250.00 | 50.00 |
| 5. கைதடி பஸ் தரிப்பிடம் அமைத்தல் | 500.00 | 200.00 | 40.00 |
| 6. வேம்பிராய் மயான கல் அகழ்வு | - | 100.00 | 20.00 |

மேற்குறிப்பிட்ட கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரப் பணத்தையும், படிவத்திற்குரிய Vat பணத்தினையும் செலுத்துவதன் பேரில் 15.07.2003 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இது சம்பந்தமாக மேலதிக விவரங்களை தலைமையலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சாவகச்சேரி பிரதேசசபை.
தலைமையலுவலகம்,
கொடிகாமம்.
04.07.2003.

(சி-1159)

கு.ந.பாலச்சந்திரன்,
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை.


# 32 ஆயிரம் பக்கங்களில் மேன் முறையீட்டு மனு!

உதவி சுங்க அத்தியட்சகர் பெரேரா படுகொலை செய்யப்பட்ட வழக்கில் - மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் மூவரும், 32 ஆயிரம் பக்கங்களைக் கொண்ட மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படுகொலை குறித்து, மஜிஸ்ரேட் மற்றும் மேல் நீதிமன்ற விசாரணைகளின் விபரங்களும், மருத்துவ அறிக்கைகளும் இந்த முறையீட்டு மனுவில் அடங்கியுள்ளன.

குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட உதவிச் சுங்க அத்தியட்சகர் அலுர வீரரத்ன, வஜிர இந்திரஜித், கமல் உதயகுமார ஆகியோர் தம்மை விடுவிக்குமாறுகோரி, இந்த மேன்முறையீட்டு மனுவைச் சமர்ப்பித்துள்ளனர்.


நிறஞ்சனாஸ் சங்கானை

சத்தியராஜ், ரம்பா, மணிவண்ணன் கபாலி நடித்த

மிஸ்ரி

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
தினசரி இரவு. 8.45 (பு.நே)

THE BOUN IDENTITY

(சி-1138)

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சரத்குமார், மீனா, ரம்யா கிருஷ்ணன் நடித்த

கே.எஸ்.ரவிக்குமாரின்

பாறை



10.30, 2.30, 6.30

(சி-1137)

THE ROYAL COLLEGE OF JAFFNA

Spoken English With Grammar

N.Vigneswaran Archery
Black Road, Chankanai
426, (302), K.K.S Road
Jaffna

(சி-1157)

சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நல்ல நிலையில் 202 - 0801 இலக்கமுள்ள ஆட்டோவும், GJ 0381 இலக்கமுள்ள மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு.

கிருஷ்ணமூர்த்தி
114/19, நாவலர் வீதி,
(தேவி அச்சக ஒழுங்கை)
யாழ்ப்பாணம். போன்:2789

(406)

மாபெரும் புத்தகம் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

புத்தகம் புத்தகம்

உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள புத்தகக் கடல் 10% - 50% கழிவு வழங்கப்படும். ஒரு சில மருத்துவ, பொறியியல், கணினிப் புத்தகங்கள். ஆங்கிலம் கற்றுக்கொள்ள பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும் ரூபா 10/= - ரூபா 100/= வரை பெற்றுக்கொள்ளலாம்.

இவைதவிர எம்மிடம் பாடசாலை, அலுவலக உபகரணங்களும் குறைந்த விலையில் பெற் றுக்கொள்ளலாம். உங்கள் தேவை எதுவானாலும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

(சி-1148) 212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-2225542

## சாலியபுர இராணுவ முகாம்

# ஆயுதக் களஞ்சிய வெடிவிபத்து; உயர்மட்ட விசாரணை ஆரம்பம்!

அநுராதபுர மாவட்டத்திலுள்ள சாலியபுர இராணுவத் தளத்தின் வெடிபொருள் களஞ்சியத்தில், நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட வெடிவிபத்துக் குறித்து - விசாரணைகளை நடத்துவதற்காக இராணுவ அதிகாரிகள் குழுவொன்றை, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல அனுப்பிவைத்துள்ளார்.

சாலியபுரவிலுள்ள கஜபா றெஜிமென்ட்டின் தலைமையகத்தில், நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் வெடிவிபத்து ஒன்று ஏற்பட்டது. வெடிபொருட்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்த களஞ்சியத்தில் திடீரெனப் பரவிய தீயினாலேயே இந்த வெடிவிபத்து ஏற்பட்டது.

இதனால், அந்தக் களஞ்சியத்தில் சேமிக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டுகள், ஆர்.பி.ஜி. ஷெல்கள், துபபாக்கி ரவைகள், கிரனேட்டுக்கள் போன்ற பெருமளவு வெடிபொருட்கள் வெடித்துச்சிதறின.

இந்த வெடிப்பினால், தொடர்ச்சியாகப் பல மணிநேரம் களஞ்சியப் பகுதியில் குண்டுவெடிப்புக்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. பின்னர் - அப்பகுதியில் பரவிய தீயைப் படையினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருந்தனர்.

சாலியபுர முகாமிலிருந்தே வட பகுதியிலுள்ள முகாம்களுக்கு வெடிபொருட்கள் விநியோகிக்கப்படுவது வழக்கமாகும். இதனால், இந்தக் களஞ்சியத்தில் பெருமளவு வெடிபொருட்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. இவற்றில் பெரும் பகுதி அழிந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னரும் இந்த இராணுவத் தளத்தின் ஆயுதக் களஞ்சியத்தில் வெடிவிபத்து ஏற்பட்டிருந்தது. இதேவேளை, இவ்வெடிவிபத்துக் குறித்து, உயர்மட்ட விசாரணைகளை நடத்துவதற்கு இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த மூன்று உயரதிகாரிகள் அநுராதபுரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்லவின் உத்தரவின் பேரிலேயே, இந்த உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த விபத்தினால் ஏற்பட்ட இழப்பு, இதற்கான காரணங்கள் குறித்து இந்தக் குழு விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

### கடற்படையினருக்கு மனிதஉரிமை கருத்தரங்கு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கடற்படையினர் மற்றும் பொலிஸாருக்கு, மனிதஉரிமைகள் தொடர்பான கருத்தரங்குகளை இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழு நடத்தவுள்ளது.

இன்று - நிலாவெளியில் கடற்படையினருக்கும், உப்புவெளியில் பொலிஸாருக்கும் இந்தக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

### பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

அராலி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் - இன்று சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு, அதிபர் மோகனநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு, பழைய மாணவர் சங்கச் செயலாளர் இ.அம்பிகைபாகன் கேட்டுள்ளார். (118)

# ஆட்சிக்காலம் முடிவடைய முன்னர் அரசை சந்திரிகா கலைக்கமுடியாது!

## காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன சூளுரை

ஜே.வி.பியுடன், ஜனாதிபதி சந்திரிகா கூட்டணி அமைத்துக் கொண்டாலும், ஆறு ஆண்டுகளுக்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை - அவரால் கலைக்கமுடியாது. அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என்று, சூளுரைத்துள்ளார் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன.


இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

சர்வதேச சமூகம் - ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மீது முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளது. இந்த நம்பிக்கையால்தான் ரோக்கியோ மாநாட்டில் பெருமளவு நிதியுதவி கிடைத்தது.


பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியிலிருந்த கடைசிக் காலகட்டத்தில், இந்த அரசாங்கத்தின் மீது வெளிநாடுகள் நம்பிக்கையிழந்திருந்தன. இதனால், வெளிநாட்டு உதவிகள் அனைத்துமே நிறுத்தப்பட்டன.

இப்போது அந்த நிலையை மாற்றி, நாட்டை அபிவிருத்திப் பணிக்குக் கொண்டுசெல்ல முடிகின்றது. அடுத்த வரவு - செலவுத்திட்டம் மக்களுக்கான நன்மைகளைத் தாங்கியதாகவே சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## நாடும் நடப்பும்




நன்றி - டெய்லி மிரர்



அரச வைத்தியசாலை சிற்றூழியர் வேலைநிறுத்தத்தால் - செயலிழந்துள்ள வைத்தியசாலைப் பணிகளைச் சீரமைக்க இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

# சுதந்திரக்கட்சி-ஜே.வி.பி கூட்டணியால் அநுரா - நிமால் இடையில் விரிசல்!

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி தொடர்பான நடவடிக்கைகளால்- அநுரா பண்டாரநாயக்கவுக்கும், நிமால் சிறிபால டி சில்வாவுக்கும் இடையில் விரிசல்கள் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

ஜே.வி.பியுடன் கூட்டணியை அமைப்பதற்கு முடிவுசெய்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி - கூட்டணியின் பொதுச்செயலாளர் பதவியை, ஜே.வி.பிக்கு வழங்குவதற்கு இணங்கியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்த இணக்கப்பாடே - சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அநுரா பண்டாரநாயக்கவுக்கும், நிமால் சிறிபால டி சில்வாவுக்கும் இடையிலான விரிசல்களை ஏற்படுத்தியிருக்கிறது.

ஜே.வி.பிக்குப் புதிய கூட்டணியின் பொதுச்செயலாளர் பதவியை வழங்கும் திட்டத்துக்கு, நிமால் சிறிபால டி சில்வா கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

ஆனால், அநுரா பண்டாரநாயக்க - பொதுச்செயலாளர் பதவியை ஜே.வி.பிக்குக் கொடுத்து, இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுவருகிறார்.

இந்த இழுபறி நிலையால், நிமால் சிறிபால டி சில்வா - ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பாகச் செயற்படுவதாக, அநுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்துள்ள நிமால் சிறிபால டி சில்வா - தான் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி, சுதந்திரக் கட்சிக்கு வரவில்லை என்றும், அநுரா பண்டாரநாயக்கவே அவ்வாறு விலகி வந்தவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை - ஜே.வி.பிக்கும், சுதந்திரக்கட்சிக்கும் இடையிலான கூட்டணி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், நிமால் சிறிபால டி சில்வாவை, கட்சியின் முக்கிய பொறுப்புக்களிலிருந்து நீக்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

இதனிடையே - ஜே.வி.பிக்கும், சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையிலான கூட்டணி குறித்த இறுதிக் கட்டப் பேச்சுக்கள் இன்றுமாலை நடைபெறவுள்ளன.

ஜனாதிபதி மாளிகையில் சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் பேச்சுக்களில்- கூட்டணி குறித்து, இதுவரை தீர்வு காணப்படாத விடயங்கள் குறித்து ஆராயப்படும் என்று தெரியவருகின்றது.

இறுதிக்கட்டப் பேச்சுக்களையடுத்து, இம்மாதம் 15 ஆம் திகதி கண்டி தலதாமாளிகைக்கு முன்பாக, இரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டணி ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

இக்கூட்டணியின் தலைமைப் பதவியை, சந்திரிகா குமாரதுங்க



வகிப்பார். பொதுச்செயலாளர் பதவி ஜே.வி.பிக்கு வழங்கப்படவுள்ளது. தேசிய அமைப்பாளர் பதவி சுதந்திரக்கட்சிக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் சந்திப்பு!

(கொழும்பு)

அமெரிக்க காங்கிரஸின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவினர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இலங்கையின் தற்போதைய அரசியற்சூழல் மற்றும் வர்த்தக வாய்ப்புக்கள் தொடர்பாக ஆராய்வதற்காக, அமெரிக்க காங்கிரஸின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழு, கொழும்புக்கு வந்துள்ளது.

ஜெரி வொங்ஸர், ஸ்கொட் ஹரோல்ட் ஆகிய இரு அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை அவரது மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பில் - ஜனாதிபதியின் செயலாளர் லக்ஷ்மன் கதிர்காமர், ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் அமெரிக்காவுக்கான இலங்கைத்தூதுவர் தேவிந்த சுபசிங்க ஆகியோரும் உடனிருந்தனர். இந்தப் பேச்சுக்கள் சுமார் 45 நிமிட நேரம் நீடித்தது குறிப்பிடத்தக்கது.

# சமாதான, அபிவிருத்தி முயற்சிகளில் ஐரோப்பிய யூனியன் உதவிவழங்கும்!

## அமைச்சர் மிலிந்தவிடம் 'உறுதிமொழி

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில், ஐரோப்பிய யூனியன் அதிகளவான பங்களிப்பைச் செய்யவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகாரப் பிரிவுக்குப் பொறுப்பான கிறிஸ் பற்றனை - அமைச்சர் மிலிந்த மொறகொட சந்தித்துப் பேச்சுநடத்திய போதே, இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது. சமாதானத்தை வலுப்படுத்தும் வகையில் ஐரோப்பிய யூனியன் செயற்படும் என்றும் கிறிஸ் பற்றன் - அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் உறுதியளித்தார்.

# சர்வதேச அமைதிகாப்புப்படை குறித்த செய்தியில் எந்த உண்மையுமில்லை!

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மறுக்கிறார்

சர்வதேச அமைதிகாக்கும் படையினை, இலங்கை சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் நோக்கம் அரசுக்குக் கிடையாது என்று, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அரசும் புலிகளும் இணக்கப்பாடு கண்டு, கண்காணிப்புக்குழுவின் அங்கத்தவர் தொகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படலாமே தவிர, சர்வதேச அமைதி காக்கும்படை வரவழைக்கப்படமாட்டாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி, சர்வதேச அமைதிப்படையின் தலையீடு இருக்காது என்று, அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலக தெரிவித்துள்ளார்.

சர்வதேச அமைதிகாக்கும் படை, இலங்கை சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக வெளியான தகவல்களையும் அவர் மறுத்துள்ளார். மேலும் - சர்வதேச அமைதி காப்புப் படையினர் பற்றி, புரிந்துணர்வு உடன்பாட்டில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும், கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பாகவே ஆலோசிக்கப்படுவதாகவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித்தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்தார்.

# கூட்டணியின் பொதுச்சபையை கூட்டி நிர்வாகக் குழுவைத் தெரிவுசெய்யுங்கள்!

## காங்கேசன்துறை கிளைக் கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபைக் கூட்டத்தைக் கூட்டி, புதிய உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென - தமிழர் விடுதலைக் கூட்டணியின் காங்கேசன்துறைத் தொகுதிக் கிளையினர் - தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி தொகுதிக் கிளையின் தலைவர் பண்டிதர் க.நாகலிங்கம் தலைமையில் கடந்த புதன்கிழமையன்று நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்திலேயே, இந்தத் தீர்மானம் சபையோரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாப்புக்கு அமைவாகப் பொதுச்சபையை விரைவில் கூட்டி, புதிய உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற பிரேரணையை, ச.தனபாலசிங்கம் பிரேரிக்க - தி.திலகதாசன் அனுமதிக்க சபையோரால் இது ஏற்றுக்கொள்ளப்பட்டது.




உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, தாவடி காளி அம்பாள் சன சமூக நிலையம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி.செல்வவினாயகர், உள்ளூராட்சி உதவியாளர் கலையரசி மற்றும் நிலைய நிர்வாகிகளைப் படத்தில் காணலாம். (96)

# வடலியடைப்பு பகுதியில் சுயதொழில் முயற்சிக்கடன்

(அராலி)

வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் - அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ், கிடைத்த சுழற்சி முறையிலான சுயதொழில் முயற்சிக்கடன் நிதியிலிருந்து, 21 பேருக்கு சுயதொழில் முயற்சிக்கடனை அண்மையில் வழங்கியுள்ளது.

இக்கடனுதவித்திட்டத்தின் கீழ் - விவசாயம், கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு ஆகிய தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்கில், தலா பத்தாயிரம் ரூபா கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.அரசரத்தினம் தெரிவித்துள்ளார். (118)

## வருடாந்த மஹோற்சவம்

அராலி வடக்கு, மயிலியற்புலம் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம், இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (118)

## வட - கிழக்கு பாடசாலை மாணவர்களின்

# ஆங்கில அறிவை மேம்படுத்த பிரிட்டனிலிருந்து தொண்டர்கள்

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் ஆங்கில அறிவையும், ஆங்கிலத்தில் பேசும் திறனையும் வளர்த்துக்கொள்வதற்காகப் பிரிட்டனைச் சேர்ந்த பட்டதாரித் தொண்டர்களிடமிருந்து உதவிகள் பெறப்பட்டுள்ளன.

மாணவர்களின் பேச்சுத்திறனையும், ஆங்கில அறிவையும் விருத்தி செய்யும் நோக்கில், இவர்கள் ஒவ்வொரு பாடசாலையிலும் ஐந்து நாட்கள் வரை தங்கியிருந்து கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வார்கள்.

இதற்காக - திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து தலா ஒவ்வொரு பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கற்பித்தல் செயற்பாடுகளுக்காக வருகைதரவுள்ள தொண்டர் குழுக்களில் 6 பேர் இடம்பெறுவார்கள் எனத் தெரியவருகிறது.

## பருத்தித்துறை - வியாபாரிமூலை பகுதியில்

# மீனவர் படகுகளை கரைக்கு அண்மையில் நிறுத்திவைக்குமாறு படையினர் உத்தரவு!

மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து வியாபாரிமூலைப் பகுதியில் - கடற்தொழிலில் ஈடுபட்டுவரும் கடற்தொழிலாளர்கள் - தமது படகுகள், வள்ளங்களைக் கரைக்கு நெருக்கமாகக் கொண்டுவந்து நிறுத்த வேண்டுமெனப் படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

படையினரின் இந்த உத்தரவால், தம்மால் ஒழுங்காகத் தொழில் செய்ய முடியாதநிலை ஏற்படும் என்றும், இதனால் - இது குறித்துக் கண்காணிப்புக்குழுவிடம் தாம், முறையீடு செய்யவுள்ளதாகவும் மயிலிட்டி கடற்தொழிலாளர் சங்கம் அறிவித்துள்ளது.

வியாபாரி மூலைப்பகுதியில் இருந்து நிரந்தரமாகக் கடற்தொழில் செய்வதற்கான வசதிகள் இல்லாததால், படகுகளைக் கரைக்கு அண்மையில் கொண்டுவர முடியாதநிலை உள்ளது.

இந்த நிலையில் - படையினர் படகுகளைக் கரைக்கு அண்மையில் கொண்டுவருமாறும், இல்லையேல் முருகைக்கற் தொடருக்கு வெளியே நிறுத்தப்படும் படகுகளுக்குப் புதிதாக அனுமதி பெறவேண்டும் என்றும் அறிவித்துள்ளனர்.

படையினரின் இந்த அறிவிப்பால், தம்மால் ஒழுங்காகத் தொழில் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதென்றும், இது குறித்துப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் புகார் செய்யப்போவதாகவும் மயிலிட்டி கடற்தொழிலாளர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

# நாய் வளர்ப்போரிடம் உறுதியுரை: உள்ளூராட்சி சபைகள் நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

நாய் வளர்ப்போரிடம் இருந்து உறுதியுரை பெற்று - நாய்களுக்கான உரிமம் வழங்குவதற்கான விண்ணப்பங்களைத் தயாரித்து அனுப்பாத பிரதேச சபைகள், நகர சபைகள் - விண்ணப்பப் படிவங்களை உடனடியாகத் தயாரித்து, அதன் பிரதியொன்றை அனுப்பி வைக்குமாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி. கிருஷ்ணசாமி, சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் கடிதம் அனுப்பியுள்ளார்.

நாய் வளர்ப்பதற்கான உரிம விண்ணப்பத்தில், நாயை வளர்ப்பிடத்திற்கு வெளியே செல்ல அனுமதிக்கமாட்டேன் என்ற உறுதியுரையை, நாய் வளர்ப்பவரிடமிருந்து பெற்ற பின்னரே, உரிமம் வழங்க வேண்டும் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாய் வளர்ப்பவரிடம், நாயை வெளியே விடமாட்டோம், என்ற உறுதியுரை பெறப்படாது உரிமம் வழங்கப்பட்டிருந்தால், இத்தகைய உரிமம் பெறப்பட்ட நாய்கள் கடிக்கும் சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்கள் - நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து - குற்றப்பணம், நஷ்டஈடு போன்றன விதிக்கப்பட்டால், அப்பணத்தைச் சம்பந்தப்பட்ட சபையை நிர்வகிப்பவரே வழங்க வேண்டும் எனவும் இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியாம்!

(கொழும்பு)

ஜே.வி.பிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டி ஆட்சியிலுள்ள அரசாங்கத்தைப் பதவி கவிழ்க்கும் திட்டங்களைத் தீட்டியிருப்பதாக எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐ.தே.க. ஆட்சியைக் கவிழ்க்கும் திட்டத்தில் ஜே.வி.பி ஆர்வத்துடன் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## சைவத் திருமுறை விழா

ஆனைக்கோட்டை இந்துசமய விருத்திச்சங்க சைவத்திருமுறை விழாவும், சைவசமய செயற்பாட்டு பரிசளிப்பு விழாவும் நாளை காலை 8.30 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## ஆலய மஹோற்சவம்

(உடுவில்)

உடுவில் ஸ்ரீ சிவஞானப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (101)

## சமய அறிவுப் போட்டி

(உடுவில்)

இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபையினர், ஆலயத் திருவிழாவை முன்னிட்டு வருடாவருடம் நடாத்தும் சைவசமய அறிவுப் போட்டிகள், இன்று நடைபெறவுள்ளன.

தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்த் போட்டியாளர்களுக்கு - இணுவில் இந்துக் கல்லூரியில் பரீட்சை நடைபெறும். காலை 9.30 மணிக்கு மேற்படி பரீட்சைகள் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள், கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் நடைபெறவிருந்து, தமிழ்த்தினப் போட்டிகள் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே. (101)

## கும்பாபிஷேகம்

சாவகச்சேரி - செருக்கல்பதி அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான மகாகும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## மறையாசிரியர் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்

(நாயன்மார்கட்டு)

யாழ்.மறைக்கல்வி நிலையத்தினால், கிறிஸ்தவ மாணவர்களிடமிருந்து மறையாசிரியர் தேர்வு 1 இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கிறிஸ்தவ மாணவர்கள், தங்கள் ஆலய பங்குத்தந்தையர்களிடம் விண்ணப்பப்படிவங்களைப்பெற்றுப் பூர்த்திசெய்து, இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை மறைக்கல்வி நிலையத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (61)

## பதில் பிரதேச செயலராக வீரபத்திரபிள்ளை

(நவிண்டில்)

யாழ்.மாவட்ட செயலகத்தில், தலைமையக உதவி அரசாங்க அதிபராகக் கடமைபுரிந்த வே.வீரபத்திரபிள்ளை, கடந்த புதன்கிழமை முதல் கரவெட்டி பிரதேச செயலக பதில் பிரதேச செயலராகப் பதவியேற்றுள்ளார்.

இதற்கு முன்னர் இவர், கரவெட்டி பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமைபுரிந்தமை குறிப்பிடத்தக்கது. (116)

## 'லிப்ட்' பொருத்தும் பணி ஆரம்பம்!

யாழ்.போதனா வைத்தியசாலை மகப்பேற்று விடுதிகளுக்கு 'லிப்ட்' இணைக்கும் வேலைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின. இதனைத் தொடர்ந்து ஏனைய விடுதிகளுக்கும் 'லிப்ட்' வசதி செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (111)

## மென்பந்து போட்டி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தையொட்டி நல்லூர் பிரதேசசபையால் நடத்தப்படும் போட்டித் தொடரில், இன்று காலை 9 மணி தொடக்கம் முத்துத்தம்பி வித்தியாலத்தில் மென்பந்து போட்டி நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பித்து, அறிவிக்கப்பட்ட கழகங்களை உரிய நேரத்திற்கு வருமாறு பிரதேசசபைச் செயலாளர் கேட்டுள்ளார்.

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(உடுவில்)

உள்ளூராட்சி வாரத்தின் தொடர் நிகழ்வாக, வலிகாமம் தெற்கு பிரதேசசபை - கரப்பந்தாட்டப்போட்டியை இன்று மயிலணி ஜனசக்தி சனசமூக நிலைய மைதானத்தில் நடத்தவுள்ளது. காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் இப்போட்டியின் அனைத்துச் சுற்றுக்களும் இன்றே நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் - மருதனார்மடம் பொதுச்சந்தையும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (101)

## பத்திரிகையாளர் குடியிருப்புக்கு பாதுகாப்பு

(கொழும்பு)

பத்தரமுல்லையில் உள்ள பத்திரிகையாளர் குடியிருப்பில் அண்மையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் மற்றும் திருட்டுச் சம்பவங்களையடுத்து அங்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

நான்காவது அகவையில்



பெயர் - வி.சன்தியா
முகவரி - பார்சல், சுவிற்சர்லாந்து

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------
முகவரி :----------------
பிறந்த ஆண்டு:----------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
----------------
பெற்றார் ஒப்பம்

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

### இந்தோனேஷியா

| | | |
|---|---|---|
| தலைநகரம் | - | ஜகார்த்தா. |
| பரப்பளவு | - | 19 லட்சத்து 4 ஆயிரத்து 569 ச.கி.மீ. |
| மொழிகள் | - | பஹாசா இந்தோனேஷியன், டச்சு, ஆங்கிலம், ஜாவாஸ். |
| எழுத்தறிவு | - | 85 வீதம். |
| சமயங்கள் | - | இஸ்லாம், கிறிஸ்தவம், இந்து, பௌத்தம். |
| நாணயம் | - | ரூபியா. |




இந்தோனேஷயா 13 ஆயிரம் தீவுக் கூட்டங்களைக் கொண்டதொரு நாடாகும். இதுவே உலகின் மிகப் பெரிய இஸ்லாமிய நாடு என்பதும் குறிப்பிடத்தக்கது.

13 ஆயிரம் தீவுகளைக் கொண்ட இந்த நாட்டில், ஆறாயிரம் தீவுகளில் மட்டும் தான் மக்கள் வாழ்கின்றனர். இவற்றிலும் - ஜாவா, சுமாத்ரா, காளிமண்டன் (இந்தோனேஷியன் போர்னியோ), ஸ்லவேசி, இரியன் ஜாயா ஆகிய ஐந்து பெரிய தீவுகளும், முப்பது சிறிய தீவுத் துண்டுகளும் முக்கியமானவையாகும்.

டச்சு கொலனியாக இருந்த இந்தோனேஷியாவை - 1942 முதல் 1945 வரை ஜப்பானிய இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. 1945 ஒகஸ்ட் 17 இல் இந்த நாடு சுதந்திரம் பெற்றதாக அறிவிக்கப்பட்டது.


இந்தோனேஷிய ஜனாதிபதி மேகவதி சுகார்ணோ புத்ரி

சுதந்திரப் போரின் பின்னர், நெதர்லாந்து (டச்சு) 1949 டிசம்பர் 27 ஆம் திகதி இந்தோனேஷியாவின் தனி ஆட்சி உரிமையை அங்கீகரித்தது.

உலகில் இயற்கை வளங்கள் அதிகமுள்ள நாடுகளில் இந்தோனேஷியாவும் ஒன்று. தகரம், அதிகளவிலான எரிபொருள் வளம், செம்பு, நிக்கல், தங்கம், வெள்ளி ஆகியன இங்கு கிடைக்கின்றன. விவசாயம் முக்கியமான தொழிலாக உள்ளது. அரிசி, புகையிலை, கோப்பி, இறப்பர், மிளகு, இலவம்பஞ்சு, தேங்காய், பாம் எண்ணெய், தேயிலை, கரும்பு ஆகியன இங்கு முக்கியமாக உற்பத்தியாகின்றன. மிகுந்த வளம் கொண்ட இந்த நாட்டில் நீண்ட காலமாக அரசியற் குழப்பநிலை நீடித்து வருகின்றது.

## உலக நாடுகளின் தேசிய பறவைகள்

| | | |
|---|---|---|
| 1. இலங்கை | - | காட்டுக்கோழி |
| 2. இந்தியா | - | ஆண் மயில் |
| 3. பர்மா | - | மயில் |
| 4. டென்மார்க் | - | வானம்பாடி |
| 5. கனடா | - | வாத்து |
| 6. ஜேர்மனி | - | வெள்ளைக்கொக்கு |
| 7. கொலம்பியா | - | பருந்து |
| 8. அமெரிக்கா | - | கழுகு |
| 9. இங்கிலாந்து | - | றொபின் |
| 10. தென்னாபிரிக்கா | - | நீலக்கொக்கு |

ற. ஜென்சன்
கோப்பாய் றோ.க.த.க. பாடசாலை



## வெண்ணிறக் கொக்கு

ஆழம் இல்லா நீரிலே
ஆசையோடு நிற்குதாம்
நீளமான மூக்கினால்
நீந்தும் மீனைக் கொத்துதாம்

கால்கடுக்கச் சேற்றிலே
கவனமாக நிற்குதாம்
பால் வெள்ளை அதன் நிறம்
பார்ப்பதற்கு நன்றிறாம்

நீளமான மூக்கினை
நீட்டிக்கொண்டு பார்க்குதாம்
ஆழம் உள்ள கடலிலே
அதற்கு வேலை இல்லையாம்

கண் திறந்து யோகி போல்
கால் வலிக்க நிற்குதாம்
நிற்பதற்குத் தக்க மீன்
தேடித் தவமும் செய்யுதாம்.



## மரம் பெரிதா? மன்னன் பெரியவனா?

பசியால் வாடிய பிச்சைக்காரன் ஒருவன், ஒரு கல்லை எடுத்து அங்கிருந்த மாமரத்தில் எறிந்தான். அந்தக் கல் பறந்துசென்று இரு மாம்பழங்களைத் தட்டிவிட்டதுமில்லாமல், நேரே போய் அந்தப் பக்கமாகத் தமது பரிவாரங்களுடன் நகர் உலா வந்துகொண்டிருந்த அரசரின் நெற்றியில் பட்டு, காயம் உண்டாக்கியது.

இது அறியாமல் மாம்பழங்களை ருசித்துச் சாப்பிட்டுப் பசியாறிக்கொண்டிருந்த பிச்சைக்காரனை, பாய்ந்து வந்து பிடித்துக்கொண்டனர் அரசரின் படை வீரர்கள். அடுத்த விநாடி பிச்சைக்காரன் அரசரின் முன் நிறுத்தப்பட்டான்.

"அரசே உத்தர விடுங்கள், உங்கள் மீது கல் எறிந்து காயப்ப



டுத்திய இவன் தலையைக் கொய்து விடுகிறோம்" என்றார் தளபதி.

"வேண்டாம். இவனை அழைத்துக்கொண்டு போய் வயிறார உணவு போட்டு, கொஞ்சம் பொற்காசுகளும் கொடுத்தனுப்புங்கள்" என்றார் அரசர்.

தளபதியும் மற்றவர்களும் புரியாமல் பார்க்க, "ஐந்தறிவே உள்ள ஒரு சாதாரண மாமரமே தன் மீது கல் எறிந்தவனுக்கு பழங்கள் தந்து பசியாற்றும்போது, இந்த நாட்டின் மன்னனாகிய நான் இதுகூடச் செய்யாவிட்டால் எப்படி?" என்றார் அரசர்.

இங்கே மடிக்கவும்



## சிறுவர் அரங்கம்

## இணைய ஈ - இன்பம்



எதற்கு முன்னாலும் ஈ என்ற எழுத்தைச் சேர்த்துவிட்டால், அது புதிய நூற்றாண்டின் இறுதிப் பகுதிக்கான நவீன வார்த்தை என்ற பொருள் இயற்கையாகவே அமைந்து விடுகின்ற 'ஈ - ஞ்ஞான' உலகில் வாழ்கிறோம் நாம். இது ஒரு வகையில் மகிழ்ச்சிதான்.

இணைய உலகம் உண்மையில் விந்தையானது. ஒரு மனிதனுக்கு, ஓரளவு நேரமும் கிடைத்து, மென்வலையில் அங்கும் இங்கும் சுழன்றுவர - ஓரளவு புரிதலும் இருந்துவிட்டால், உலகையே எம் காலடியில் கட்டிப்போட்டு, கண் முன்னே எதை நினைத்தாலும் உடனே அழைத்துவந்து, அது குறித்த அத்தனை குறிப்பையும் ஐந்து நிமிடத்திற்குள் அச்சில் (print) கொண்டுவந்துவிடலாம் என்றால் இது விந்தைதானே!

தமிழ்நாட்டில் சங்ககால இலக்கியக் கூட்டம், புட்டபர்த்தியில் சத்ய சாய்பாபா விழா, விஸ்வநாதன் ஆனந்தின் சதுரங்க விளையாட்டு, மெல்போர்னில் காவடி, மல்லாவியில் கண்ணிவெடி, கண்டாரில் கண்ணீர்ப்புகை என்று எதை வேண்டுமானாலும், நினைத்தவுடன் இழுத்துப் பிடித்து, அது குறித்த அத்தனை தகவல்களையும் சேகரித்துவிடக்கூடிய அதிசய உலகம் இந்த மென்வலை.

நல்ல நாள் பார்ப்பதற்குச் சாத்திரியாரிடம் போனாலென்ன, திருமண நாதஸ்வரம் ஒழுங்கு பண்ணும் தேவையிருந்தாலென்ன, ஏன், இலங்கையிலிருந்து புகையிலையும், கருவாடும் யார் யார் இறக்குமதி செய்கிறார்கள் என்று அறிந்துகொள்ளவும்கூட - இந்த மென்வலை உதவிபுரிகிறது என்றால் பாருங்களேன்.

ஒரு சில வருடங்களுக்கு முன்னர், மொனிற்றர் (monitor), சி.பி.யூ. (C.P.U.) என்ற சொற்களெல்லாம் பிரபலமாக இருந்த காலம் போய், றியல் பிளேயர் (real player), மெகாபைற் (megabyte), ஈமெயில் (e-mail) என்ற சொற்பதங்கள் பழகிப்போய், கைப்பர்லிங்க் (hyperlink), ஜாவா (java), எம்.பி.3 (MP3) என்பவைகூட சாதாரண வார்த்தைகளாகி விட்டன.

இப்போதெல்லாம் மேக் (meg), ஐ.பி (IP), எக்ஸ்.பி.(XP), புரோபைபர் (Profyber), ஈ-கொமேர்ஸ் (e-commerce) போன்ற நவீன 'ஈ - வார்த்தைகள்' கூட சிறியவர்கள் வாயிலும் முதியவர்கள் வாயிலும் நுழைந்து, சாதாரண பேச்சுக்களில் பயன்படுத்தப்படுவதைப் பார்க்கக் கூடியதாக உள்ளது.

ஒரு வாரத்திற்கு முன்னர், 59 வயதுப் பெண், என்னிடம் கேட்ட கேள்வியை நீங்களும் படித்துப் பாருங்கள் நல்லது. "நீங்கள் அனுப்பிய ஈ - மெயிலை நான் 'அவுட்லுக் எக்ஸ்பிரஸில்' (outlook express) ஓப்பின் (open) பண்ணி, அதன் அற்றாச்மென்டை (attachment) கிளிக் (click) பண்ணியபோது மீடியா பிளேயரை (media player) டவுன்லோட் (download) பண்ணச் சொன்னது. அதைச் செய்தேன். இதிலே வரும் சவுண்டை (sound), எம்.பி.3க்கு (MP3) மாற்றி, என் மகனின் வெப்சைட்டில் (website) அப்லோட் (upload) பண்ண முடியுமா?" என்று கேட்க, டொம் என்றொரு சத்தம்.

விழுந்தது நான்தான். ஒருவாறு சுதாகரித்துக்கொண்டு எழுந்து பதில் சொன்னேன். வினாக்கள் தொடர்ந்தன. அதிசயத்தில் விழி பிதுங்கி ஓங்கட்டிக் கொண்டேன். இது உண்மையில் நடந்தது. இந்த சிந்தனை மாற்றம் ஓர் மகிழ்ச்சி தரக்கூடிய நாகரிக வளர்ச்சி என்று சொல்லலாம். புத்தகங்களை மற்றவரிடமிருந்து இரவல் வாங்குவதிலிருந்து, பேருந்து ஏறி, நூலகசாலை சென்று, அங்கே நான் தேடிய நூல் யாரிடமோ சென்றிருப்பதை அறிந்து, என்னையே நான் திட்டுவதுவரை - அதைவிட, மலையேற இந்தியா சென்ற என் பாட்டியிடம் வைரமுத்துவின் புதுக்கவிதைத் தொகுதி வாங்கும்படி கூற, அவர் ஆத்திசூடியும், கொன்றைவேந்தனும் வாங்கிவந்து என் இரத்த அழுத்தத்தைப் பரிசோதிப்பதுவரை, அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட, இந்த மென்வலை ஒரு நல்ல காரணியாக அமைந்து விடுகிறது.

மென்வலையைப் பாவிக்காமல் அல்லது பாவிக்கப் பயந்து வாழ்பவர்கள், அவசியம் இதுபற்றி அறிய முயற்சிக்கவேண்டும். மென்வலை மிக இலகுவான பயன்படுத்தலைக் கொண்டதோடு, பயன்படுத்துனரின் வசதிகளை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதே இந்த தயாரிப்பு நிறுவனங்களின் முக்கிய சேவையாகவும் வளர்ந்து வருகிறது.

உதவியை அழுத்திக் கேட்டால்தான் உதவி என்றநிலை மாறி, எப்போதும் ஒரு மூலையிலே உதவி செய்தபடி ஒரு சிறு கட்டம், அடுத்து என்ன செய்யலாம் என்று யோசிப்பது மறைந்து, இப்போது மென்வலையே ஒருசில முன்மொழிதல்களைச் செய்கின்ற லாவகம். வகுப்பிற்கு சென்றோ அல்லது விலையுயர்ந்த நூல்களிலிருந்தோ கற்றுக்கொள்ள வேண்டிய பலவிடயங்களை, மென்வலையில் நேரடி இலவச வகுப்புகள் மூலமே கற்றுக்கொண்டு, பரீட்சையும் செய்துவிடத்தக்க இணையத்தளங்கள் கற்பித்தல்கள் -

சந்தேகங்களை யாரிடம் கேட்பது என்றநிலை மாறி, எந்த ஒரு வினாவையும் மென்வலையில் பதித்துவிட்டால், அது எந்தக் கேள்வியாக இருந்தாலும், இருபதிலிருந்து இருநூறு பேர் வரை முண்டியடித்துக்கொண்டு தங்களுக்கு இது குறித்துத் தெரிந்த கருத்துக்களையும், பதில்களையும் தந்து விடுகின்ற உறவாடல் - அவர் சொன்னார், இவர் சொன்னார் என்ற அடுத்தவரின் விமர்சனங்களைத் தாங்கி வாழும்நிலை மறைந்து, எனக்குத் தெரியும் என்று உரிமையோடு பதில் கொடுக்கக்கூடிய மனவளர்ச்சி, ஒரு மனக்கஷ்டம் என்றால் அதற்கு ஆறுதல் சொல்ல ஆயிரம் இணையத்தள முகம்தெரியாத நண்பர் குழாம், எனக்குத் தெரியும் என்று நினைத்துக்கொண்டு முடித்துவிட ஆரம்பித்த வீட்டுவேலையில் இடையிலே ஏற்படும் தடங்கல்களை அப்போதே



சரிசெய்து கொள்ள ஓர் அறிவுசார் நண்பன்(பி) என்று இன்னோரன்ன பல முகங்களைத் தன்னகத்தே கொண்டு, தனிமையை ஓரங்கட்டி, எங்களை எப்போதும் சமூகப் பிராணிகளாக வாழ்வதற்கு இந்த இணையத்தளம் பல மறைமுகப் பணிகளை 24 மணிநேரமும் செய்து வருகிறது.

(அடுத்தவாரம் தொடரும்...)

குயின்ரஸ் துரைசிங்கம்

# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- ஆ.நிரோசன்
கற்கும் பாடசாலை :-
புனித மரியாள் வித்தியாலயம்
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
கணினித்துறை,
விளையாட்டுத்துறை.



முழுப்பெயர் :- சொ.ஜீவதீபன்
கற்கும் பாடசாலை :-
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல், முத்திரை சேகரித்தல், ஆங்கிலம் வாசித்தல்.

முழுப்பெயர்:- கெ.பவித்திரன்
கற்கும பாடசாலை :-
உடையார்கட்டு மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 1
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வி, விளையாட்டு, சித்திரம் வரைதல்.

முழுப்பெயர்:- வ.துஷாந்தன்
கற்கும் பாடசாலை :-
கிளி.கனகபுரம் மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள் :-
முத்திரை சேகரித்தல், வானொலி கேட்டல், விளையாட்டு.

முழுப்பெயர்:- கு.லிங்கநேசன்
கற்கும பாடசாலை :-
சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி
கற்கும் தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள :-
சித்திரம் வரைதல், தொலைக்காட்சி பார்த்தல், விளையாட்டு.

முழுப்பெயர்:- சே.சஞ்சிகா
கற்கும் பாடசாலை :-
மகாஜனாக் கல்லூரி
கற்கும் தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப்புத்தகம் வாசித்தல், முத்திரை சேகரித்தல்.

முழுப்பெயர்:- த.முரளிராசன்
கற்கும் பாடசாலை :-
கலாநிதி ஆ.தியாகராசா மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :-7
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், விளையாட்டு, வானொலி கேட்டல்.

முழுப்பெயர்:- பா.லதீப்
கற்கும் பாடசாலை :-
பெரியபுலம் மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், விஞ்ஞானம், கிரிக்கெட்.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்
## விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................

கற்கும் பாடசாலை :..............................

கற்கும் தரம் :..............................

வீட்டு முகவரி :..............................

பிறந்த திகதி :..............................

ஆர்வமுள்ள துறைகள் :..............................

:..............................

.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

# உலக விமானசேவை



இலங்கை ~ சிறிலங்கன் எயர் லைன்ஸ்
இந்தியா ~ இந்தியன் எயர் லைன்ஸ்
ஹொங்கொங் ~ கதே பசுபிக்
பிரான்ஸ் ~ எயர் பிரான்ஸ்
தாய்லாந்து ~ தாய் எயர் வேய்ஸ்
சுவிஸ் ~ சுவிஸ் எயர்
கொரியா ~ கொரியன் எயர்
பாகிஸ்தான் ~ பாகிஸ்தான் எயர் லைன்ஸ்

தி.ஜெனத்குமாரன் - கோப்பாய் றோ.க.த.க. பாடசாலை

இங்கே மடிக்கவும்



# முட்டாள் கழுதை




# விடுகதைகளும் விடைகளும்

1. வரும்போது வெண்சிவப்பு, வளரவளரத் தகதகப்பு, போகும்போது கடும் சிவப்பு. அது என்ன?
சூரியன்
2. மழைகாலம் வந்துவிட்டால், மகராசி பாட்டெடுப்பாள். அவள் யார்?
தவளை
3. தீக்குளித்தாலும் திடமாக இருப்பவர். அவர் யார்? செங்கல்
4. கல்வீட்டுத்தாத்தா மெதுவாகத்தான் நடப்பார். அவர் யார்? ஆமை
5. வயலில் உழுதவன், ஊதியம் வாங்கவில்லை. அவன் யார்? மண்புழு
6. புத்தாண்டில் புகுந்த விருந்தாளி, தங்குவதோ ஓராண்டு. அவன் யார்?
கலண்டர்
7. வெயிலில் மலரும், காற்றில் உலரும். அது என்ன?
வியர்வை
8. தலையைச் சீவினால் தாளிலே நடப்பான். அவன் யார்? பென்சில்
9. உயிரில்லா நீதிபதி உரிய தீர்ப்பு வழங்குகிறார். அவர் யார்? தராசு.
10. ஊசி போட்ட வைத்தியர் பாடிக்கொண்டே போகிறார். அவர் யார்?
நுளம்பு



*சத்தியோஜாத சர்மா சசிதரன்*
*சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.*

1. சின்ன மச்சான் குனியவைச்சான். அவன் யார்?
முள்ளு
2. வெள்ளை வீதியில், கறுப்புக்கார் ஓடுது. அது என்ன?
கண்
3. கொக்கு நிற்க குளம் வற்றுது. அது என்ன?
விளக்கு
4. வாயிலே தோன்றி, வாயிலே மறையும் பூ. என்ன பூ?
சிரிப்பு
5. ஏறும் இறங்காது அது என்ன?
வயது


*சா.கௌரிசா. தரம் - 2*
*யாழ். வதிரி திருஇருதயக் கல்லூரி.*

# உங்கள் கைவண்ணம்

ச.மஞ்சுகி,
தரம் - 06, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



து.விதுஷன்
தரம் - 04
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.



# கன்றுக்குட்டி

*சின்னச் சின்ன கன்றுக்குட்டி*
*சிறிய வெள்ளைக் கன்றுக்குட்டி*
*துள்ளி ஓடும் கன்றுக்குட்டி*
*சோம்பல் இல்லாக் கன்றுக்குட்டி*

*சிறிதாய் நான்கு கால்கள் உண்டு*
*கள்ளமில்லா உள்ளம் உண்டு*
*பட்டு மேனி வாலும் உண்டு*
*பார்க்க அழகுக் கன்றுக்குட்டி*

*அம்மா அம்மா என்று நீயும்*
*அழுவதேனோ கன்றுக்குட்டி*
*அம்மா சும்மா பால் தருவாள்*
*அருகில் வாயேன் கன்றுக்குட்டி.*

ச.சத்திதாரணி,
இந்து இளைஞர் மன்ற
ஆரம்ப பாடசாலை, உடுவில்.

ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டி விடும்*

திருக்குறள்.

# நமது நோக்கு

## கரும்புலிகள் எம் கவசங்கள்!

இன்று 'கரும்புலிகள் நாள்' தமிழர் தாயகமெங்கும் சிறப்புற அனுஷ்டிக்கப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் - உயர் பாய்ச்சலையும், வேகத்தையும்- தம் அளப்பரிய தியாகத்தின் மூலம் உருவாக்கியவர்கள் கரும்புலிகளே.

ஒவ்வொருவரும் தம் உயிரினைப் பாதுகாக்கவும், வாழ்வின் இன்பங்களையும், முன்னேற்றத்தையும் அனுபவிக்கவும் துடிப்பது மனித இயல்பெனக் கூறப்படும்போது-

தமது சாவுக்கே நாள் குறித்து நின்றவர்கள்/நிற்பவர்கள் கரும்புலிகள்.

தம் உயிரையே ஆயுதமென - உயிராயுதமாகக் கொண்டு, விடுதலைப் போரின் தடைகளை முட்டித் தகர்த்த கரும்புலிகளின் அரும்பெரும் செயல்களால் தான், விடுதலைப் போராட்டம் இந்தளவு வீச்சுடன், விஸ்வரூபமெடுத்திருக்கின்றது.

நெல்லியடியில் கப்டன் மில்லர் ஆரம்பித்துவைத்த இந்தத் தியாகப் பாதையில் - இன்று 241 கரும்புலிகள் தம் இன்னுயிர்களை, தம் தாயக மண்மீட்புக்காகத் தந்திருக்கின்றனர்.

விடுதலைப் போராட்டம் ஒரு நெருக்கடியைச் சந்தித்து நின்றபோது - கப்டன் மில்லர் மேற்கொண்ட கரும்புலித் தாக்குதல் - சிங்களப் படை வட்டாரங்களிலும், அரசியல் தலைமைகளிலும் கொடுத்த பேரதிர்ச்சி - தமிழர் வீரமும், தியாகமும் பற்றி ஏற்படுத்திய உண்மையின் உணர்வலைகள், இன்றுவரை அவர்கள் நெஞ்சங்களில் அதிர்ந்துகொண்டே இருக்கின்றன.

இதுதான் இலக்கென வரிந்துகொண்டு - அந்த இலக்கினை அடைவதற்காக - தம் உயிரையும் தருவதற்கான துணிவும், உயர்ஈகமும், மனித எண்ணங்களுக்கு எட்டாத அற்புதமான அர்ப்பணிப்பும் - கரும்புலிகளின் தற்கொடையை உலகம் முழுவதும் வியக்கவைத்திருக்கின்றது.

தனது தாய் மண்ணுக்காக, மக்களுக்காக தம்மையே தந்துதவும் புலிவீரர்களின் வழியில் - கரும்புலிகளின் தியாகம் - தமிழீழ மணிமகுடத்தின் விலைமதிக்க முடியாத மாணிக்கமாகின்றது.

எதிரியுடன் சமராடும் களங்களில் தற்காப்பெடுத்தே, எதிரியைத் தாக்குவது போர் மரபானபோது - முழுக்கவனத்தையும் தம்மில் ஈர்த்துக் கொண்டு - தடையகற்ற, வெடித்து அதிர்ந்து - வெற்றிக்கு வழிசமைக்கும் கரும்புலிகளின் போருபாயம், உலகின் போரியல் அறிஞர்களை திக்குமுக்காட வைத்திருக்கிறது.

தரையில் மட்டுமல்ல, கடலிலும் சாதனைகள் படைத்த கடற்கரும்புலிகள் - தமிழீழ விடுதலைப் போருக்குப் புதிய அத்தியாயத்தைத் திறந்தவர்களே. தாய் மண்ணோடு, தாயகக் கடலும், எதிரியின் ஆக்கிரமிப்பிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்ற இலட்சிய உறுதியுடன், வெடிமருந்தேற்றிய படகுகளுடன், எதிரிக் கப்பல்களை மோதித் தகர்த்து - தாயகக் கடலிலும், அடிமை விலங்கொடிக்கப் புறப்பட்ட கடற்கரும்புலிகளே, மாவீரர்களான கரும்புலிகளில் கணிசமானவர்களாக இடம்பிடித்திருப்பது- கடற்கரும்புலிகளின் செயலாக்கத்தைச் சொல்லும் சேதியாகும்.

ஆணுக்குப் பெண் சளைத்தவர்களல்ல என்று புவியனைத்தும் வாய்ச்சொல்லில் கூறிவிட்டு ஓய்ந்துவிட - தமிழர் படையில் பெண் போராளிகள் காட்டிய அதிவீரமும், திறமையும், உளம் பூரிக்கும் வெற்றிகளும் - புதிய புறநானூற்றை இங்கு படைத்திட்டபோது - கரும்புலிகள் படையிலும் தமிழ்மங்கையர் அணிசேர்ந்தாற்றிய அருங்கதைகள், மெய்சிலிர்க்க வைப்பவை.

தமிழ் மண்ணும், மக்களும் மட்டுமே மனதிலிருக்க, வழியனுப்பி வைத்த தலைவனும், தளபதிகளும் நெஞ்சம் துடித்துநிற்க, பழகிய தோழர்கள் கலங்கிநிற்க - தெரிவது இலக்கு மட்டுமே என்று, விடுதலைக்கு வித்தாகிறோம் இன்னும் கணப்பொழுதுகளில் என்ற உளம் கொள்ளாப் பூரிப்புடன் - மகிழ்வோடு மரணத்தை அணைத்த கரும்புலிகளின் வரலாறு - எம் தேசத்தின் அடிநாதமாக நீக்கமற எங்கும் நிறைந்திருக்கின்றது.

வார்த்தைகளில் வடித்துவிட முடியாத மனோபலமும், சாவையே அஞ்சிநிற்க வைக்கும் உறுதியும் கரும்புலிகளின் உள்ளார்த்தமாகிவிட - அவர்கள் படைத்திட்ட புதிய காவியம் - சிங்களத்தை மட்டுமல்ல, இன்று உலகையே தமிழர் வீரம் பற்றி சிலாகிக்கவும், யோசிக்கவும் வைத்திருக்கின்றது.

தமிழ் மண்ணில் கால்பதிக்கத் திட்டமிடும் எந்த அதிவல்லமை கொண்ட சக்தியும் - விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் பற்றியே அஞ்சிநிற்பதை, பேசிவருவதை இன்று சர்வதேச அரங்குகளிலும் அவதானிக்க முடிகின்றது.

இந்த வகையில் தமிழினத்தின் காவலரணாக, அதி உன்னதமான திறன்கொண்ட பாதுகாப்புக் கவசங்களாக - கரும்புலிகளே திகழ்வதை, இன்றைய நாளில் தமிழ்மக்கள் அனைவரும் மனதிலிருத்தி - இனத்தின் விடிவுக்காக மறைந்த அற்புதச் சகோதரர்களை, சகோதரிகளை அஞ்சலித்து நிற்போமாக.

# கேணல் ராஜு நினைவு மண்டபம் வட போர்முனை பாசறையில் திறப்பு!

## முக்கிய தளபதிகள் பலரும் பங்கேற்றனர்

கேணல் கிட்டு பீரங்கிப் படையணியின் சிறப்புத் தளபதியாக இருந்து, சுகவீனம் காரணமாக வீரச்சாவடைந்த, கேணல் ராஜு நினைவு மண்டபம்- வட போர்முனைக் கட்டளைப் பணியகப் பாசறையில் திறந்துவைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு வட போர்முனைக் கட்டளைப் பணியகப் போராளி கனிமாறன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மேற்குப் போர்முனை கட்டளைப் பணியகத் தளபதி கேணல் ஜெயம் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

கேணல் ராஜு நினைவு மண்டபத்தை, அவரது மனைவியும், போராளியுமான கங்கா நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் குட்டிசிறி மோட்டார் படையணித் தளபதி கேணல் பானு சிறப்புரை நிகழ்த்தினார்.

வட போர்முனைக் கட்டளைப் பணியகப் போராளிகள் மத்தியில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற போராளிகளுக்கு - வட போர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் சான்றிதழ்களை வழங்கினார்.

பரிசுகளை தளபதிகள் - கேணல் விதுஷா, கேணல் துர்க்கா, தினேஷ் மாஸ்ரர் ஆகியோர் வழங்கினர்.

இந்த நிகழ்வில் - கேணல் கிட்டு பீரங்கிப் படையணியின் தளபதி மணிவண்ணன், ஜெயந்தன் படையணிச் சிறப்புத் தளபதி ஜனார்த்தனன் மற்றும் தளபதிகள், போராளிகள், பொதுமக்கள் பெருமளவில் கலந்துகொண்டிருந்தனர்.

தளபதி அறிவு நன்றியுரை நிகழ்த்தினார்.

# புலிகளின் முக்கியஸ்தர்களை தமிழ் எம்.பிக்கள் சந்தித்தனர்

(மட்டக்களப்பு)

தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக, மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், புலிகளின் பிராந்தியத் தளபதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தற்போதைய அரசியல் சூழ்நிலை மற்றும் பொருளாதார நிலை பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

கல்லடி இராணுவமுகாமை நிரந்தரமாக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டிருப்பது குறித்தும் இச்சந்திப்பில் விரிவாகப் பேசப்பட்டது.

இந்தச் சந்திப்பில், மட்டு - அமபாறை பிராந்தியப் பிரதித் தளபதி ராம், மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோரும், நாடாளுமன்ற உறுப்பினர்களான - ஜோசப் பரராஜசிங்கம், கிருஷ்ணபிள்ளை, சந்திரநேரு ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# சமாதானம் தொடராவிட்டால் நிதியுதவி நிறுத்தப்பட்டுவிடும்!

## பிரித்தானிய தூதுவர் எச்சரிக்கை

(கொழும்பு)

ஜப்பான் உதவிவழங்கும் மாநாட்டில் வழங்கப்பட்ட 4.5 பில்லியன் டொலர்களுக்கான உறுதி, சமாதானப் பேச்சுக்களுடன் தொடர்புடையதென்றும், பேச்சுக்கள் தொடராது தடைப்படும் பட்சத்தில், இந்நிதியைச் சர்வதேச சமூகம் வழங்காது என்றும், இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஸ்ரீவன் இவான் தெரிவித்துள்ளார்.

சி.எம்.ஐ. கொழும்புக்கிளையின் இரண்டாவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, இத்தகவலை ஸ்ரீவன் வெளியிட்டுள்ளார்.

ஜப்பான் நிதி மாநாட்டில் - பிரித்தானியாவும் 43 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ஸ் வழங்குவதற்கு உறுதியளித்தது. வட - கிழக்கு புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள வழங்கப்பட்ட இத்தொகை, சமாதானப் பேச்சுக்கள் தொடரப்படும்போது முற்றுமுழுதாகப் பயன்படுத்தப்படும் என்று இவர் தெரிவித்தார்.

## பொ.ஐ.முன்னணியின் ஆட்சிக்காலத்தில்

# ஆயுதக்கொள்வனவு நடவடிக்கைகளால் 400 மில்லியன் டொலர் வீண் இழப்பு!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் படையினருக்கு ஆயுதங்கள் மற்றும் வாகனங்கள், தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டதில், நானூறு மில்லியன் அமெரிக்க டொலர்கள் வீணாக இழப்பு ஏற்பட்டதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அமைச்சரவைக் கூட்டத்தில் உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தகவல் வெளியிடுகையில் -

விமானப்படையினருக்கென ராடர் கருவிகளைக் கொள்வனவு செய்வதில் பெருமளவு பணம் இழக்கப்பட்டுள்ளது.

இந்த ராடர் கருவிகளைத் திருத்துவதற்கென அமெரிக்க நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதற்கெனப் பெருந்தொகையான பணமும் வழங்கப்பட்டது.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர், இந்த ராடர் கருவிகளை, மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் உதவியுடன், எந்த மேலதிகச் செலவும் இல்லாமல் திருத்த முடிந்தது எனப் பிரதமர் தெரிவித்தார்.

இத்தகைய நடவடிக்கைகள் குறித்து ரோக்கியோ உதவி மாநாட்டிலும் கேள்வி எழுப்பப்பட்டதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# முஸ்லிம் காங்கிரஸ் – ஐ.தே.க. முரண்பாடுகள்; தீர்த்து வைப்பதற்கு விசேட குழுக்கள் அமைப்பு!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் பிரதேச மட்டத்தில் அவ்வப்போது ஏற்பட்டுவரும் கருத்து வேற்றுமைகளை உடனுக்குடன் களையும் நோக்கில், உயர் அதிகாரங்களைக் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கு இருகட்சிகளும் இணக்கம் கண்டுள்ளன.

இந்த இணக்கத்தின் அடிப்படையில், முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக இந்தக் குழுவுக்கு இக்கட்சியின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமை தாங்குவார். ஐ.தே.க. சார்புக் குழுவுக்குக் கட்சியின் பிரதித் தலைவரும், அமைச்சருமான கரு ஜெயசூரிய தலைமைவகிப்பார்.

இந்த இரண்டு குழுக்களும் அடிக்கடி சந்தித்து, தங்களுக்கிடையிலான கருத்து வேற்றுமைகளைக் களைந்து, புரிந்துணர்வு நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்கும் இணக்கம் கண்டுள்ளன.

ஐ.தே.கவுக்கும், முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் பிரதேச மட்டத்தில் அண்மைக்காலமாக அடிக்கடி கருத்து வேற்றுமைகள் இடம்பெற்று வருகின்றன. இந்தக் கருத்து முரண்பாடுகளைத் தீர்க்கும் நோக்கில் இருகட்சிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் சிறிகோத்தாவில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பிலேயே மேற்படி இணக்கப்பாடு எட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# சபாநாயகரை மிரட்டிய பாதுகாப்பு அதிகாரிகள்

(கொழும்பு)

நாடாளுமன்ற சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவைக் கந்தானையில் வழிமறித்து, துப்பாக்கியைக் காட்டி மிரட்டிய குழுவினரை - பொலிஸார் அடையாளம் கண்டிருப்பதாகக் கந்தானைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தானையில் - சென்றுகொண்டிருந்த சபாநாயகர் வாகனத்தை வழிமறித்து, வாகனமொன்றில் வந்த குழுவினர் - துப்பாக்கியைக் காட்டி மிரட்டினர். இச்சம்பவம் குறித்து, விசாரணைகளை நடத்திய பொலிஸார் இந்தக் குழுவினர் - வடமத்திய மாகாண முதலமைச்சர் பேர்ட்டி பிரேம்லால் திஸநாயக்கவின் பாதுகாப்பு அதிகாரிகள் என்று இனங்காணப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# மிலிந்த, பீரிஸ் வந்த பின் திட்ட வரைபு புலிகளுக்கு!

(கொழும்பு)

தற்போது வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள நீதி, அ[illegible]யலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரி[illegible] மற்றும் விஞ்ஞான கைத்தொழில், பொருளாதார மறுசீரமை[illegible] அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோர் நாடு திரும்பி[illegible] பின்னரே, இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்ட வரை[illegible] புலிகளுக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அரசதரப்புத் [illegible]வல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் திட்டவரைபு குறித்து மேற்படி அமைச்சர்களுடன் கலந்தாலோசித்துவிட்டே பிரதமர் ரணில், புலிகளிடம் சமர்ப்பிக்கவிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தத் திட்டவரைபுடன் அடுத்தவாரமே நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் வன்னிக்குச் செல்லலாம் என்று கூறப்படுகிறது.

# புலனாய்வு நடவடிக்கைகளில் இந்தியாவின் 'றோ' அமைப்பு!

*(நேற்றைய தொடர்ச்சி)*

1974 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி, இந்தியா - சரித்திரத்தில் தனது பெயரைப் பதிவுசெய்தது. எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல், தகவல் எதுவும் முன்னரே வெளியாகாமல், பொக்ரான் என்ற இடத்தில் 15 கிலோ தொன் புளூட்டோனியம் குண்டை வெடிக்கவைத்து, உலகை ஆச்சரியப்படுத்தியது.

இது 1978 இன் ஆரம்பத்தில் நடைபெற்ற ஒன்று. பொக்ரானில் இநதியா ஓசைப்படாமல் அணுகுண்டுப் பரிசோதனை நடத்தி முடித்தநிலையில், பாகிஸ்தானும் கிட்டத்தட்ட அது



இந்தியப் படைக்கு மணலாறு கற்பித்த பாடம் - தலைவர் பிரபாவுடன் கேணல் கிட்டு.

போன்ற அணுகுண்டுப் பரிசோதனை ஒன்றை நடத்த முடிவெடுத்தது.

அத்துடன், இந்தியா செய்தது போலவே செயற்பாடுகளை இரகசியமாக வைத்துக்கொள்ளவும் விரும்பியது. இதற்காகப் பாகிஸ்தான் தேர்ந்தெடுத்த இடத்தின் பெயர்தான் டகூடா. டகூடாவில் ஓசைப்படாமல் அணுசக்தி மையம் ஒன்றை அமைக்கத் தொடங்கியது.

பாகிஸ்தான் இரகசியமாக வைததிருந்த இந்த விஷயம், RAW வுக்குத் தெரியவந்தது. RAW சுமார் 600 Agent களைப் பாகிஸ்தானுக்குள் இரகசியமாக இறக்கிவிட - அதில் ஒரு சில RAW Agent கள் பாகிஸ்தானின் டகூடா அணுசக்தி மையத்துடன் சம்பந்தப்பட்ட ஓரிருவரை அணுகவும் முடிந்தது.

டகூடா அணு மையத்தில் அணுகுண்டு வெடிப்புக்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த அதே நேரத்தில், டகூடா அணுமையத்திற்கு வெளியே வைத்து RAW வின் Agent கள் - சில பாகிஸ்தான் பிரஜைகளுடன் பேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பாகிஸ்தான் தனது அணுகுண்டை வெடிக்க முன்னரே, டகூடா அணுசக்தி மையத்தின் முழுமையான வரைபடங்கள் அடங்கிய வரைபு ஒன்று கிட்டத்தட்ட RAW Agent ஒருவரின் கைக்குக் கிடைக்கக்கூடியநிலை வந்திருந்தது.

அந்த வரைபைக் கொடுக்கக்கூடிய பாகிஸ்தானின் விஞ்ஞானி ஒருவருடன் பேரம்பேசியபோது, பாகிஸ்தான் விஞ்ஞானி அணுசக்தி மையத்தின் முழுமையான வரைபடங்களைக் கொடுப்பதற்கு, RAW வின் Agent இடம் கூலியாகக் கேட்ட பணம் எவ்வளவு தெரியுமா? வெறும் பத்தாயிரம் US டொலர்கள் மட்டுமே.

இந்தப் பணத்தை மாத்திரம் கொடுத்திருந்தால், பாகிஸ்தானின் மிகப் பெரிய அணுசக்தி மைய இரகசியம் ஒன்று இந்தியாவின் வசம் வந்திருக்கும். ஆனால், RAWவிற்குக் கிடைக்கவிருந்த வெற்றியும், வரைபும் கைக்கெட்டியது வாய்க்கெடாமல் போகக்கூடிய எதிர்பாராத திருப்பம் ஒன்று இந்த இடத்தில் ஏற்பட்டது.

பாகிஸ்தானிலிருந்த RAW வின் Agent - RAW வின் Head office இற்கு அனுப்பியிருந்த பத்தாயிரம் US டொலர் தேவை எனும் கோரிக்கை அடங்கிய இரகசிய File, அதன் முக்கியத்துவம் கருதிப் போய்ச் சேர்ந்த இடம் - இந்தியப் பிரதமரின் அலுவலகம்.

அந்த அலுவலகத்தில் இருந்தவர் இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய். மொரார்ஜி தேசாய் - பாகிஸ்தானிலிருந்து குறுக்கு வழியில் இராணுவ இரகசியங்கள் பெறுவதை அனுமதிக்காமல் - RAWவின் Agent கேட்டிருந்த 10 ஆயிரம் US டொலர் பணத்தைக் கொடுக்கமுடியாது என்று, அந்த File ஐ அத்துடன் Close பண்ணிவிட - RAW விற்குக் கிடைக்க வேண்டிய வெற்றியும், வரைபும் கிடைக்காமல்போனது.

ஆனால், விடயம் அத்துடன் முடிந்துவிடவில்லை. அதற்குப்பின்னர் நடந்ததுதான் Climax. RAW வின் Agent பாகிஸ்தான் விஞ்ஞானியுடன் நடத்திய பேரத்தைத் தெரிந்துகொண்ட இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் செய்த முதல் வேலை என்ன தெரியுமா?

பாகிஸ்தான் அரசுக்கு இந்தச் சதி பற்றிய முழுமையான தகவல்களை நேர்மையாகத் தெரிவித்தது. விளைவு - RAW விற்காகப் பத்தாயிரம் US டொலருக்கு - டகூடாவின் வரைபைக் கொடுக்கத் தயாராகவிருந்த பாகிஸதானின் விஞ்ஞானியின் பதவி மட்டும் காலியாகவில்லை. ஆளே காலியாகி விட்டார்.

**சிக்கிம் பிரச்சினையில் RAW**

சிக்கிம் ஒரு காலத்தில் மன்னராட்சியில் இருந்துவந்த நாடு. சிக்கிமைச் சூழ இருந்தவை - திபெத், நேபாளம், பூட்டான், மற்றும் மேற்கு வங்காளம் என்பதால், அதன் Geographical Location கருதி, சிக்கிம் மீது இந்தியாவுக்கு நெடுநாளாகவே ஒரு கண் இருந்தது.

ஆனால், இலகுவாகச் சிக்கிமை ஆக்கிரமிக்க முடியாமலிருந்தது. காரணம் - சிக்கிம் மக்கள் வைத்திருந்த மன்னர் மீதான விசுவாசம். அதை உடைப்பதற்காக RAW சிக்கிம் நாட்டுக்குள் இறக்கிவிடப்பட்டது.

RAW வின் ஆலோசனையின் பேரில் முதலில் சிக்கிம் மன்னரிடம் இந்திய அரசு நெருங்கி நட்பு வைத்துக்கொண்டது. இந்திய அரசு சிக்கிம் மன்னருக்கு இருந்த சோக்ஜோல் பட்டத்தை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்தது. சோக்ஜோல் என்றால் - தர்மராஜா. இதனால், இந்தியாவுக்கும் சிக்கிம் மன்னருக்கும் எந்த விதமான பிரச்சினையுமில்லை என்றொருநிலை தோற்றுவிக்கப்பட, அதன்பின்னர் RAWவின் திட்டப்படி காய்கள் நகர்த்தப்பட்டன.

1972 ஆம் ஆண்டு பாகிஸ்தான் போருக்குப் பின்னர், RAW வுக்கு- சிக்கிமுக்குள் நுழைந்து செய்யவேண்டிய காரியங்களுக்கான Green Signal ஐ அன்றைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி கொடுத்தார்.




பொக்ரானில் அணுகுண்டு வெடித்த இடம்

சிக்கிம் மன்னருக்கு எதிராகக் கிளம்பக்கூடியவர்கள் என்று RAW சேர்த்து வைத்திருந்த List இல் இருந்தவர்களையெல்லாம் RAW ஒன்றாகச் சேர்த்து. அவர்களை வைத்து சிக்கிம் மன்னரை அகற்றிவிட்டு, ஜனநாயக அரசை சிக்கிமில் அமைக்கப்போவதாக RAW வினால் அவர்களுக்குக் கூறப்பட்டது.

ஆனால், RAW வைத்திருந்ததோ அதற்கு நேர்மாறானதொரு திட்டம். 1972 இல் தொடங்கிய இந்த Operation, சுமார் மூன்று வருடங்களில் RAW நினைத்தபடியே - RAW வுக்கு வெற்றியாக முடிந்தது.

வெற்றி என்றால், சிக்கிம் மன்னராட்சி அகற்றப்பட்டதா? புதிய ஜனநாயக அரசு - சிக்கிம் மக்களுக்காக அமைக்கப்பட்டதா? நடந்தது அதைவிடப் பெரிய விடயம். மன்னராட்சி, தனி நாடு எல்லாம் போய், 1975 ஏப்ரல் 26 ஆம் திகதி, சிக்கிம் - இந்தியாவின் 22 ஆவது மாநிலமாக இணைத்துக் கொள்ளப்பட்டது.

இவற்றைவிட, RAW வேறு வேறு காலப்பகுதிகளில் - வேறு வேறு சிறிதும், பெரிதுமான சில வெற்றிகளைப் பெற்றுவந்திருக்கின்றது. Operation சாணக்யா திட்டத்தில் 1991 இல் சிறிநகர் Valley ஊடாக RAW வால் நுழையமுடிந்தது. 1988 இல் மாலைதீவு நாட்டுக்குள் சுமார் 200 போராளிகளை உள்ளே நுழையவிட்டு, அது ஏற்படுத்திக்கொடுத்த சந்தர்ப்பத்தை உபயோகித்து, இந்தியப் படைகளை உள்ளே நுழைக்க முடிந்தது. பாகிஸ்தானின் Tele Communication Tower ஐ வெற்றிகரமாக Tap பண்ணி தொலைபேசி உரையாடல்கள் எல்லாவற்றையும் பதிவுசெய்ய முடிந்தது.



மும்பாயிலுள்ள பாபா அணு ஆராய்ச்சி மையம்

இப்படியாகப் பல சிறிதும், பெரிதுமான வெற்றிகள். இவற்றில் வெற்றிபெற்ற அளவுக்கு - பல சந்தர்ப்பங்களில், பல இடங்களில் RAW விற்கு மகத்தான சறுக்கல்களும் ஏற்பட்டிருக்கின்றன.

**ரிஷி**

இதே RAW விற்கு ஏற்பட்ட முக்கியமான சில சறுக்கல்கள்-

**இந்தியாவில் அவசரகாலச்சட்டப் பிரகடனம்**

இந்திரா காந்தியின் பதவிக்கு உலைவைத்த, அவசரகாலச் சட்டத்தைக் கொண்டுவர அவருக்கு ஆலோசனை கூறியது RAW தான். உண்மையில் - இந்திய உள்நாட்டு விவகாரங்களைக் கவனிக்கும் உளவுத் துறையான, IB யின் அன்றைய தலைவர் ஜெயராம் - அவசரகாலச் சட்டத்தைக்கொண்டு வரவேண்டாம் என்று இந்திராகாந்தியிடம் கூறியிருந்தும், RAW இன் அன்றைய தலைவர் ஆர்.என்.கௌவின் ஆலோசனைப்படி Emergency ஐக் கொண்டுவந்தார் அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி.

Emergency முடிவுக்கு வந்தபோது, தொடர்ந்து வந்த தேர்தலில் அவரது கட்சியான காங்கிரஸ் மண்ணைக் கௌவியது மாத்திரமல்ல, இந்திரா காந்தியால் தனது சொந்தத் தொகுதியைக்கூட வெல்லமுடியாமற் போனது.

**ஈழப்போர் - போராளிகள் விவகாரம்**

இதுதான் RAW வின் சரித்திரத்திலும் சரி, இந்திய சரித்திரத்திலும் சரி மிக அதிகளவு மூக்கறுபட்ட விவகாரம். இதுபற்றிப் பலரும் பல இடங்களிலும் கூறிவிட்டார்கள. உங்களுக்கும் இதன் விபரங்களில் பல, தெரிந்திருக்கும். இதனால், இதுபற்றி இங்கு விரிவாக ஆராயப்படவில்லை.

ஆனால், RAW விட்ட அடிப்படைத் தவறு என்ன என்பது பற்றி ஒரேயொரு வாக்கியத்தில் கூறிவிடலாம். இந்தியா 1970 களில் முக்தி பாஹினி இயக்கத்துக்கும், பங்களா தேஷுக்கும் உபயோகித்த அதே Technic ஐ 10, 15 ஆண்டு களின் பின்னர், அப்படியே அச்சு அசலாக - ஈழப் போராளிகள் விவகாரத்திலும் செயற்படுத்தப் பார்த்தது.

விளைவு - எதிர்பாராத வகையில் அது Back Fire பண்ணிவிடடது. ஏராளமான பண, உயிர்ச் செலவுகளுடன் RAW விளையாடுவதற்குத் தனது Home Ground ஐ விட்டு வெளியே வேறு Ground இற்குப் போகும், அந்த Ground ஐ Home Ground ஆக வைத்திருப்பவர்கள் - வெளியேயிருந்து வந்த RAW தலைமையின் கீழ் விளையாடவேண்டும்.

இது வேண்டுமானால் பங்களாதேஷில் நடந்திருக்கலாம். ஆனால், இலங்கையில் நடக்கக்கூடிய காரியமா? இதனால், இந்த எதிர்பார்ப்பு இலங்கையில் பலிக்கவில்லை. காரணம் - ஈழப்போராளிகள் பற்றி RAW கொண்டிருந்த மகா பிழையான அந்த estimation. ஈழப்போராளிகளின் இக்கட்டான நேரங்களில் கூட - RAW ஆல் அவர்களைத் தங்கள் வழிக்குக் கொண்டு வரமுடியவில்லை. இதிலிருந்து ஒரு விடயத்தை மாத்திரம் RAW தெளிவாகப் புரிந்துகொண்டிருக்கும் - 'புலி படுத்தாலும் பூனையைவிட உயரமாக இருக்கும்' என்பதை. ☆

---

# உடனடி மருத்துவ சிகிச்சை தொடர்வதன் மூலம் காக்கை வலிப்பு நோயினைக் குணமாக்கலாம்!

சுகாதார அமைச்சினால், ஜூலை மாதம் 5 ஆம் திகதி - தேசிய காக்கைவலிப்பு தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இத்தினத்தின் தொனிப்பொருள் "இருளிலிருந்து வெளிச்சத்துக்கு" என்பதாகும்.

காக்கைவலிப்பு நோய் பற்றிப் பயப்பட வேண்டியதில்லை. ஏனெனில், நாளை இந்நோய் உங்களுக்கோ அல்லது உங்கள் நண்பர், உறவினர் ஒருவருக்கோ ஏற்படலாம். இது ஒரு தொற்றுநோயல்ல. மேலும் இது ஒரு குணமாக்க முடியாத நோயுமல்ல.

எனினும், நோயைக் குணமாக்க உங்களது வழிகாட்டல், கவனம் மற்றும் ஒத்துழைப்பு மிகவும் முக்கியம். இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கான முதற்படி - இந்நோயைப் பற்றி முன்னரே அறிந்துகொள்வதாகும்.

காக்கை வலிப்பு நோய்க்குக் காரணம் - மூளையில் சாதாரணமாகக் காணப்படும் மின்னியல் இயக்கப்பாடு, சடுதியாக அதிவேகமாகச் செயற்படுவதாகும். இது குறுகிய நேரத்திற்கே நிலைத்து நிற்கும். இவ்வேளையில், நோயாளியின் சுய நினைவு அற்றுப்போய் அவரது கை, கால் நடுங்குவதைக் காணமுடியும்.

இந்நோய்க்கான அறிகுறிகள் - காய்ச்சல் ஏற்படும்போதோ அல்லது தலையில் காயம் ஏற்பட்ட பின்போ ஏற்படலாம் என்றும் காய்ச்சலோ, தலையில் காயமோ இல்லாதநிலையில் மேற்படி அறிகுறிகள் இரண்டு தடவைக்குமேல் ஏற்பட்டால் இது காக்கை வலிப்பாக இருக்கலாம். இவ்வாறான நோயாளி உங்களுக்கு அருகிலோ அல்லது தெரிந்தவராகவோ இருக்கலாம். எவ்வாறாயினும், நீங்கள் செய்யவேண்டியது என்னவென்றால் - அவரை அண்மையிலுள்ள அரச வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக அழைத்துச் செல்வதேயாகும்.

உடனடியாக, தகுந்த சிகிச்சையை, தகுந்த முறையில், நீண்ட காலத்திற்குப் பெறுவதன் மூலம் நோயைப் பூரணமாகக் கட்டுப்படுத்த முடியும்.

நோயாளி சாதாரண வாழ்க்கையொன்றை வாழ வழிவகுக்கவும், அவரது வாழ்க்கை முறை சீர்குலையாமல் பேணி, நோயை முற்றாகக் கட்டுப்படுத்தமுடியும். காக்கை வலிப்பு என்பது அவருடைய விதியல்ல என்பதை நிரூபிக்கமுடியும்.

**காக்கை வலிப்பின்போது பொதுவாக ஏற்படும் அறிகுறிகள்**

- மயக்கமடைந்து சிலவேளைகளில் கதறிய வண்ணம் கீழே விழக்கூடும்.
- வாயிலிருந்து நுரை வெளியேறும்.
- பல், வாய் இறுக்கி மூடப்படும்.
- கண்கள் மேலே செல்லும்.
- நாக்கு, உதடு கடிபடும்.
- கை, கால் விறைப்படையும் பின், பின்னும் முன்னும் வேகமாக அசையும்.
- சிலவேளைகளில் மலம், சிறுநீர் வெளியேறும்.

**முதலுதவி**

- நோயாளியை ஒருபக்கம் சரித்துப் படுக்கவைக்கவும். இவ்வாறு செய்வதன்மூலம் சளி, வாந்தி போன்றவற்றால் சுவாசக்குழாய் அடைபட்டு உயிராபத்து ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.
- கரண்டியை வாயினுள் போடவோ, எதையும் பருக்கவோ எவருக்கும் இடமளிக்கவேண்டாம்.
- இரும்புப் பொருட்களை நோயாளியின் கையில் கொடுப்பதால், வலிப்பைக் கட்டுப்படுத்தமுடியாது. இது ஒரு மூடநம்பிக்கை.
- சில நிமிடங்களுக்குள் வலிப்பு நிற்காவிட்டால், அருகிலுள்ள அரச வைத்தியசாலைக்கு நோயாளியை விரைவாக அழைத்துச் செல்லவும்.
- நோயாளி, சிபார்சு செய்யப்பட்ட மருந்துகளைச் சரியானமுறையில் எடுக்கிறாரா எனப் பார்க்கவும். அவர் நோயைப் பற்றி வெட்கப்பட்டால் அதனைப் போக்கவும்.
- நோயாளி சாதாரணமாக வாழ்க்கையைவாழ உதவிசெய்யவும்.
- தொடர்ந்தும் அவர்மேல் அக்கறை செலுத்தவும்.

சரியான முறையில் தகுந்த நேரத்தில் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவந்தால், காக்கைவலிப்பிற்கு எமது வாழ்க்கையைப் பறிகொடுக்கத் தேவையில்லை. ✪

# உயிரையே ஆயுதமாய்க் கொண்டு உலகனைத்தும் வியக்கவைத்தவர்!

கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள். எமது போராட்டப் பாதையின் தடைநீக்கிகள். எதிரியின் படைப்பலத்தினை, மனப்பலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்.

கப்டன் மில்லருடன் கரும்புலிகளின் சகாப்தம் ஆரம்பமாகியது. என்றுமே உலகம் கண்டிராத, எண்ணிப்பார்க்கவும் முடியாத தியாகப் படையணி ஒன்று தமிழீழத்தில் உதயமாகியது.

கரும்புலி வீரர்களின் தோற்றமும், தற்கொலைப்படையாக அவர்களின் வளர்ச்சியும் - எழுச்சியும், மிகவும் நுட்பமான அவர்களின் போர்ச் சாதனைகளும் எமது போராட்டத்தின் ஒரு வரலாற்றுத் தேவையாகவே எழுந்தது.

உயிரை ஆயுதமாக்கி ஏன் கரும்புலிகள் உருவானார்கள் என்பதை முதலில் பார்ப்போமானால், விடுதலைப் போராட்டத்தை நசுக்கி, அதன் மூலம் தமது ஆதிக்க வெறியாட்டத்தை நிலைநிறுத்தி, தமிழினத்தின் உரிமையினைச் சிதைத்துவிடலாமென்று நினைத்துச் செயற்பட்டவர்களுக்கு - தமிழினத்தின் உயிரைக் குடித்து கருவறுக்க களமிறங்கியவர்களுக்கு தம் உயிர்கொண்டே, உயிராயுதமாகப் பதிலளிக்க உருவானவர்களே கரும்புலிகள்.

கரும்புலிகள் உருவாக்கம் கண்ட நாள் தொடக்கம் படையினருக்கும், சிங்கள அரசுகளுக்கும் அந்தச் செய்தியின் தாக்கம் மரணஅடியை ஏற்படுத்துவதாகவே தொடர்ந்தது.

இன்றும் கரும்புலிகள் படையணியைக் கலைத்துவிடவேண்டுமென்ற கோரிக்கை - அவர்களின் அச்சத்தைத தெளிவுபடுத்துவதாகவே தெரிகின்றது. கறுப்பு ஜூலை என்று தமிழினத்தை வேகவைத்தவர்களுக்கு, அந்த ஜூலையிலேயே கரும்புலிகள் மூலமாகவே பாடம் கற்பித்ததும் சொல்லக் கூடியதாக அமைந்துவிட்டது.

கரும்புலி கப்டன் மில்லர் வீறுகொண்டெழுந்து, அன்று தனது மனோபலத்தால் எதிரியின் பலத்தை சிதைத்தழித்தான். மில்லர் நடந்த பாதையிலே, எமது இன மானத்தைக் காப்பாற்றுவதற்காக கரும்புலிகளாக ஏராளமானவர்கள் சீறி எழுந்தார்கள். இன்று வரை 241 கரும்புலிகள் மாவீரர்களாகியுள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருமே தனித்தனி வரலாறுகள். எம் இனத்திற்காக உலகை ஆச்சரியத்திற்குள்ளாக்கிய அற்புதங்கள். அதனைச் சொற்களாக்கிவிட முடியாது. அவர்களின் செயற்பாடுகளும், எண்ணங்களும் உயரியவை.

**கனகரவி**

கரும்புலி என்னும்போது, அதன் உள்ளர்த்தம் - மனோபலம், உறுதி, புலப்பட்டுவிடாத செயற்பாட்டுத்திறன், இலக்கையெட்டி வெற்றியைக் கொடுக்கும் என்ற பல்வேறு கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது. கரும்புலிகளின் உருவாக்கலும், செயற்பாடும் உன்னதமானது. அவர்களின் ஈடுஇணையற்ற ஈகம் உயர்வானது. எந்தச் சக்தியாலும் தகர்க்கவோ, தடுக்கவோ முடியாத வலுவான்களாகவே கரும்புலிகள் மிளிர்கின்றனர்.

மற்றவர்களுக்குப் புதிராகத் தெரியும் கரும்புலிகள், தம் இலக்கைப் புயலாக எட்டுகின்றனர். அந்த இலக்கைப் புன்னகைத்தபடி எட்டுவதும் விழிவிரியவே உலகை ஆச்சரியப்பட வைத்து வருகின்றது. இந்த உலக உருண்டையில் மனிதன் உயிர் வாழ்ந்தபடியே எதையும் செயற்படுத்த எண்ணுகின்றான். அந்த உயிரையே தற்கொடையாக்கும் மனவலு, மனித சக்திக்கும் அப்பாற்பட்டதே.

தரையிலே தமிழன் வாழ்வு பறிக்கப்படும் போதும், தாய்மண் சிதைக்கப்படும் போதும், தாய்நாட்டின் கடல் மடியில் சுதந்திரமாகத் தொழில் செய்யமுடியாமல் போனபோதும், பெற்றோரையும், உறவுகளையும், நண்பர்களையும், தசைத் துண்டங்களாக்கிக் கூறுபோடப்பட்டபோதும் - அதனைப் பார்த்துக்கொண்டு தலைகவிழ்ந்து இருக்கமுடியாதவரே அதற்குப் பதிலடி கொடுக்க, கரும்புலிகளாய் களமிறங்கினர். அதிலும் சாவினைச் சுமந்து கொண்டபடியே, சாவுக்கஞ்சாமல் சாவினை ஏற்படுத்தியவர்களுக்கு - சாவினையே பரிசாகக் கொடுத்தார்கள் கரும்புலிகள்.

இந்த இடத்தில் இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிடலாம். முதற் கரும்புலித் தாக்குதல் தரையில் தொடங்கியபோதும் - கூடுதலாக கடற்கரும்புலிகளே கரும்புலிகள் பட்டியலில் அதிக எண்ணிக்கையிலுள்ளனர்.

எதிரிக்கலங்களை இடித்து மோதும் உறுதியிலும், வெடித்தெழும் ஓசையின் அதிர்விலும் உறுதியானவர்கள் கரும்புலிகள். இதனைத் தரையிலும், கடலிலும் அவர்கள் நிதர்சனமாக்கினர். அவர்களின் தாக்குதல் வெற்றி, தமிழரை மகிழ்ச்சிக்குள்ளாக்கியபோதும், கரும்புலிகளின் இழப்பு மக்கள் மனதை நெகிழ வைக்கின்றதாகவே உள்ளது.


எந்தவொரு மனிதனின் சாவும் சொல்லிக்கொண்டு வருவதில்லை. நான், குறிப்பிட்ட இந்த நேரத்தில் தான் உயிர்துறப்பேன் என்று எவரும் சொல்வது கிடையாது அல்லது சாவினை எதிர்பார்த்து காத்திருப்பதும் கிடையாது. ஆனால், இந்த விடயத்திலும், கரும்புலிகள் உன்னதமான தியாகத்தால் உயர்ந்து நிற்கின்றனர். அர்ப்பணிப்பின் உச்சியில் போற்றப்படுகின்றனர்.

காற்றுடனும், கடலுடனும், மண்ணுடனும் கலந்துகொள்ளும் கரும்புலிகள், எம்மின விடுதலையை உயிரினும் மேலாக நேசித்தனர்.

அந்த நேசிப்பை நாமும் சுவாசித்து, அவர்களின் தியாகத்தை மனதிலிருத்தி, எங்களின் வணக்கத்திற்குரியவர்களான கரும்புலி மாவீரர்களை நெஞ்சில் நிறுத்துவோம். ◊

# இவர்களிடம் மட்டும் தோற்கும் என் கவிதை

-புதுவை இரத்தினதுரை



அவர்களை எழுதும்
ஒவ்வொரு தடவையும்
நான் தோற்றே போகிறேன்.
சொற்களைக் கோர்வையாக்க
சூத்திரம் போலொன்று வருகிறதேயன்றி
கவிதை வரக்காணேன்.
'ரோபேட் புருஸ்' போல
நானும் விடுவதாயில்லை.
'கரும்புலியின் நதிமூலம்'
எனக்குப் புலப்படுவதாயுமில்லை.
எனினும்
இத்தனை வல்லமைகளுடன் சேர்ந்தே
எனக்கும் நாளாந்தமென்பதில்
எத்தனை செருக்கு.
என் தோல்வியே வெற்றியாகிறது.
கண்ணாடி முன்நின்றாலும்
அவர்களின் கட்புலனுக்கே
அவர்கள் அகப்படாதபோது
கவிஞன் காவியமெழுதுவது எப்படி?
அகப்பட்டதை வைத்து
வம்ச வரலாற்றுடன் சமரகவி பாடலாமே தவிர
ஊற்றின் தோற்றுவாயை தொடவே முடியாது.
பாறை பிளந்தூறும் சுனைக்கசிவை
சுரக்கச் செய்வது எத்தனை பிரயத்தனம்?
வெடிப்பினூடு வருகிறதே ஊற்று
எத்தனை ஆச்சரியம்.
இந்த ரிஷிமூலம் யாரறிவார்?
எட்ட இருப்பவர்களுக்கு மட்டுமல்ல
கிட்டவானவரும் அளவெடுக்க முடியாதென்பதே
என் ஆதங்கம்.
எனக்குத் தெரியும் அவர்களை.
அவர்களுடன் பேசியிருக்கிறேன்.
சிரித்து மகிழ்ந்திருக்கிறேன்.
சிரித்து மகிழ்வதென்பது
சிலருக்கு ஆச்சரியமாகவும் இருக்கலாம்.
அவர்கள் புன்னகை மேகங்கள்;
சந்தோஷ நதிகள்;
சிறுவச்சிரிப்பு முகத்தினர்
என்னென்றுதான் முடிகிறது இவர்களால்
இப்படி இருந்துபோக?
பிரமித்துப் போவேன் ஒவ்வொரு தடவையும்.
ஒன்றாக உண்டு
ஒன்றாக உறங்கி
கரும்புலி இவர்களென
தெரிந்துதான் விரியுமென் உறவு.
'என் மரணத்தின் பின்னும்
தொடருவேன் உங்களுடனான தோழமையை'
சொல்லி விடைபெற்றுப் போனான் ஒரு கரும்புலி.
'எனக்காகவும் ஒரு பாட்டு வேண்டும்'
சத்தியம் வாங்கிவிட்டுப் போனான் இன்னொருவன்.
'நீங்கள் இருக்கும் போதே நாங்கள் போய்விடவேண்டும்.
அப்போதுதான் பாட்டுவரும்'
கூட்டாகச் சொல்லிக் கையசைத்துப் போனது
ஒரு கரும்புலிக் கூட்டமே.
சொல்லிப்போகும் இரவெல்லாம் அழுவேன்
அருகில் படுத்திருக்கும் மனைவிக்கும் தெரியாமல்.
வெடிக்கிறார்களோ, இடிக்கிறார்களோ
அறியேன் நான்.
சேதிவர நானும் சிதறிப் போகிறேன்.
'இலக்கடைந்தார்' என அறிந்து
முகம் சிரிக்கும்.
தோழமையின் பிரிவெண்ணி
இதயம் அழும்.
இரண்டக வாழ்வெனக்கு இதில்மட்டும்.
கேட்டபடி பாட்டெழுத அமர்வேன்
பாட்டா வரும்?
என் பேனா கசிந்ததிலும்
விழிகள் கசிந்ததுதானே அதிகம்.
அழுதழுது எழுதிமுடிக்க
நானெரிந்த சாம்பல் குவிந்திருக்கும்.
கவிஞனாக இருப்பது பெருமையா
எவன் சொன்னான்?
கரும்புலியை எழுதிப்பார் புரியும்.
இத்தனைக்குப் பின்பும்
எழுதியெழுதிப் பார்க்கும் ஒவ்வொரு தடவையும்
ஏனோ நான் தோற்றே போகிறேன்
இன்றும் தான். ★


மக்கள் வங்கி

அறிவித்தல்

மக்கள் வங்கியின் யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையிலும், சுன்னாகம் கிளையிலும் 31-12-1984 வரை அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில்

பகிரங்க ஏல விற்பனை

செய்யப்படும்

| கிளைகளின் விபரம் | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் செய்யப்படும் இடம் |
|---|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை | 19-07-2003 இலிருந்து - → 22-07-2003 வரை. | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |
| சுன்னாகம் கிளை | 26.07.2003 இலிருந்து - → 29.07.2003 வரை. | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

யாழ். பிரதேச முகாமையாளர்,
மக்கள் வங்கி.

(1156)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வைகோ கைதைக் கண்டித்து சென்னையில் எதிர்ப்புக் கூட்டம்

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசியதற்காக 'பொடா' சட்டத்தின்கீழ் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலர் வைகோவுடன், கைதுசெய்யப்பட்ட 8 ம.தி.மு.க நிர்வாகிகள் தங்களை வழக்கிலிருந்து விடுவிக்கக்கோரி, தாக்கல் செய்த மனு மீது, ஜுலை 15 ஆம் திகதியன்று தீர்ப்பளிக்கப்படவிருக்கிறது.

சென்னை பூவிருந்தவல்லி 'பொடா' விசாரணை நீதிமன்றத்துக்கு வைகோ உள்ளிட்ட 9 பேர் நேற்று அழைத்துவரப்பட்டனர். 8 பேரின் விடுவிப்பு மனுமீது நேற்றுத் தீர்ப்பளிக்கப்படும் என்று, 'பொடா' நீதிமன்ற நீதிபதி ராஜேந்திரன் முன்னர் அறிவித்திருந்ததால், பெருந்திரளான ம.தி.மு.கவினர் நீதிமன்றத்தில் கூடியிருந்தனர்.

ஆனால், தீர்ப்பை 15 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக நீதிபதி அறிவித்தார். இதையடுத்து வைகோ உள்ளிட்ட அனைவரது நீதிமன்றக் காவல், வரும் 15 ஆம் திகதிவரை நீட்டிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை என்றென்றும் ஆதரிப்பேன் என்று, இந்திய நாடாளுமன்றத்தில் பேசியமைக்காக, 'பொடா' சட்டத்தின்கீழ் மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச்செயலர் வைகோ சிறையிலிடப்பட்டு ஜுலை 11 ஆம் திகதியுடன் ஓராண்டு நிறைவடைகிறது.

இந்நிலையில் சென்னை பூவிருந்தவல்லி 'பொடா' நீதிமன்றத்துக்கு வைகோ உள்ளிட்ட 9 ம.தி.மு.க நிர்வாகிகள் நீதிமன்றக் காவலுக்காக நேற்று அழைத்துவரப்பட்டனர். அனைவரது காவலும் ஜுலை 15 ஆம் திகதிவரை நீட்டிக்கப்பட்டது.

பின்னர், 'பொடா' நீதிமன்ற வளாகத்தில் குழுமியிருந்த செய்தியாளர்களிடம் பேசிய வைகோ, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசியதற்காக - தான் உள்ளிட்ட 9 ம.தி.மு.கவினர் சிறையிலடப்பட்டு, ஜுலை 11 ஆம் திகதியுடன் ஓராண்டு நிறைவடைகிறது. ஆளும் ஜெயலலிதா அரசின் இந்த கொடூரச்செயலைக் கண்டித்து, சென்னையில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி தலைமையில் - ஜுலை 11 ஆம் திகதியன்று அடக்குமுறைக்கு எதிரான கண்டன நாள் பொதுக்கூட்டம் நடைபெறும் என்று கூறினார்.

இந்த கண்டப் பொதுக்கூட்டத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர். கூட்ட ஏற்பாடுகள் குறித்து, ம.தி.மு.க உயர்நிலைக் குழுவினர், நேற்று கட்சித் தலைமையகமான தாயகத்தில் ஆலோசனைக் கூட்டமொன்றையும் நடத்தினர்.



வத்தளையில் நேற்று நடந்த விபத்தொன்றில் வாகனத்தில் சென்ற மூன்று பள்ளி மாணவர்கள் கொல்லப்பட்டனர். மேலும் சிலர் படுகாயமடைந்தனர். மாணவர்கள் பயணம்செய்த வானின் நிலை இது.

# கேதீஸ்வர கும்பாபிஷேகம் நாளை சிறப்புற ஆரம்பம்!

ஈழத்திலுள்ள பாடல்பெற்ற திருத்தலங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம், நாளை வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

கடந்த கால யுத்தத்தினால் திருக்கேதீஸ்வர ஆலயம் - எவரும் செல்ல முடியாத சூனியப்பிரதேசமாகவும், மக்கள் சென்று தரிசிக்க முடியாத இடமாகவும் மாறியிருந்தது.

ஆனால், மீண்டும் 27 ஆண்டு காலத்திற்கு பின் இம்முறையே பெருஞ்சாந்திப் பெருவிழா நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 45 நாட்கள் நடைபெறும் நிகழ்வில், சொற்பொழிவாற்றுவதற்காகத் தஞ்சைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஈ.சுந்தரமூர்த்தி, பேராசிரியர் க.பாஸ்கரன், சென்னைப் பல்கலைக்கழக இந்துத்துறைத் தலைவர் பேராசிரியர் பொ.கிருஷ்ணன், கலைமாமணி சோ.முத்துக்குமாரசாமி ஆகியோர் வருகை தந்துள்ளனர்.

இக் கும்பாபிஷேகத்திற்கு பெருமளவிலான மக்கள் பல பகுதிகளிலிருந்தும் செல்லவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிற்றூழியர்களாக படையினர்; மகிந்த ராஜபக்ஷ கண்டனம்!

வைத்தியசாலைச் சுத்திகரிப்பு மற்றும் சமையல் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளமைக்கு, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலை சிற்றூழியர்கள் மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தத்தால் வைத்தியசாலைப் பணிகள் சீர்குலைந்ததையடுத்து, அரசாங்கம் படையினரை சுத்திகரிப்பு மற்றும் சமையல் பணிகளில் ஈடுபடுத்தியுள்ளது. இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டபோதே, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசாங்கம், வைத்தியசாலைப் பணிகளில் படையினரை ஈடுபடுத்தியுள்ளது, இது வைத்தியசாலை சிற்றூழியர்களின் உரிமைகளை மீறும் செயலாகும்.

படையினரை இந்தப் பணிகளில் ஈடுபடுத்துவது தொடர்பாக, அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்டபோது, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமும் சம்மதம் பெறப்படவில்லை.

அவர், இந்த முடிவை எதிர்க்கலாம் என்பதற்காகவே - அவர் இல்லாத நேரத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இல்லாதபோது, சுகாதார சேவையில் படையினரை இவ்வாறு ஈடுபடுத்தத் தேவையில்லை. நோயாளர்கள் கவனிப்பு முக்கியம்தான். ஆனால், அரசாங்கம் அரசியல் யாப்புக்கு அமைவாகச் செயற்படவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பாடசாலை...

யாக்கப்பட்டதைக் கண்டித்தும், இக் குற்றத்தைச் செய்தவர்களைக் கண்டுபிடிக்கவும் கோரி - மேற்படி பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் தமது கற்றல், கற்பித்தல் நட்வடிக்கைகளைப் பகிஷ்கரித்து, யாழ். பிரதான வீதியில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், யாழ். பிரதான வீதியில் சில மணிநேரம் போக்குவரத்துத் தடைப்பட்டது.

(58,65,ரா)

## புளொட்...

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டு, தப்பிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

32 வயதுடைய ஜஸ்ரின் வைரமுத்து மேகநாதன் என்று அழைக்கப்படும் வவுணதீவு வாசியான இவர், நீண்டகாலமாக புளொட் அமைப்பின் உறுப்பினராவார்.

இந்தச் சம்பவத்தையடுத்து - படையினரும், பொலிஸாரும் ஸ்தலத்துக்குச் சென்று சுற்றிவளைப்பில் ஈடுபட்டதுடன் தேடுதல்களையும் நடத்தினர்.

# அமைதியை ஏற்படுத்த விரும்பின் ஜே.வி.பி. எம்முடன் இணையட்டும்

## அமைச்சர் மகிந்த விஜேசேகர அழைப்பு

ஜே.வி.பி. உண்மையிலேயே போரை நிறுத்தி, அமைதி முயற்சிக்கு ஒத்துழைக்கவேண்டும் என விரும்பினால், ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்துடன்தான் இணையவேண்டும். பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணையக்கூடாது என்று, கடற்தொழில் நீரியல் வள அமைச்சர் மகிந்த விஜேசேகர தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில், சமாதான முயற்சிகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும்கூட ஒத்துழைக்க வேண்டும். பொதுஜன ஐக்கிய முன்னணி, தற்போதைய ஆட்சியைக் கலைத்துவிட்டு, புதிய தேர்தலை நடத்துவதற்கு முயற்சி செய்கிறது.

ஆனால், புதிய தேர்தல் நடத்தினாலும் - பொதுஜன ஐக்கிய முன்னணியினால் ஆட்சியைப் பிடிக்க முடியாது என்றும், அவர் மேலும் குறிப்பிட்டார்.

# இலவச விநியோகத்திற்காக 50,000 தென்னை விதைகள்

தென்னை வள அபிவிருத்தி சபையினரால், இந்த ஆண்டில் யாழ். மக்களின் விநியோகத்திற்காக, 50 ஆயிரம் தென்னை விதைகள் விரைவில் அச்சுவேலியில் நடப்படவுள்ளன.

இதற்கென தென்னம் விதைகள் தென்பகுதியிலிருந்து எடுத்து வரப்படவுள்ளன. 2002 ஆம் ஆண்டு 25 ஆயிரம் தென்னம் விதைகளே நடப்பட்டு, மானிய அடிப்படையில் மக்களுக்கு வழங்கப்பட்டன. ஆனால, இவ்வருடம் தெங்கு வளர்ப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் முகமாக மேலதிகமாக 25 ஆயிரம் தென்னம் விதைகள் நாட்டப்படவுள்ளன.

இதேவேளை - கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு விநியோகிக்கும் வகையில், பரந்தனிலுள்ள பன்னங்கண்டி தென்னம்பிள்ளைப் பண்ணையிலும், 50 ஆயிரம் தென்னம் விதைகள் நடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் -போதிய நிதியுதவி கிடைக்காமையினாலேயே, தென்னம நடுகைத் திட்டத்தை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக, தென்னைவள அபிவிருத்தி சபையின் பிராந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்தகால யுத்த நடவடிக்கையினால் யாழ்.குடாநாட்டில் அழிக்கப்பட்ட தென்னை மரங்களிற்குப் பதிலாக - தென்னை மீள் நடுகைத் திடடமொன்றினை பெருந்தோட்டத்துறை அமைச்சிற்கு கையளித்திருந்தது.

ஆனால், இதுவரை அதற்கு எந்தவிதமான நிதியும் அரசினாலும், பொது நிறுவனங்களாலும் வழங்கப்படாமையினாலேயே தமது திட்டத்தை முன்னெடுத்துச் செல்லமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகவும், வடமாகாணத்தில் 30 ஆயிரம் ஏக்கர் தென்னை நடுகைத் திட்டத்திற்கு 1016.6 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்று கரும்...

நடைபெறவுள்ளது.

வன்னிப் பகுதியின் அனைத்துப் பகுதிகளிலும், கரும்புலிகள் நாளையொட்டி மிகவும் உணர்வெழுச்சியுடனான நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. அஞ்சலிக் கூட்டங்கள் உட்பட பல்வேறு நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இதேவேளை - கிளிநெச்சி நகரில் கரும்புலிகளின் நினைவாக, பிரமாண்டமான நினைவுப் பந்தல் அமைக்கப்பட்டு, கரும்புலிகளின் உருவப்படங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் கரும்புலிகளின் உருவப்படம் தாங்கிய ஊர்திகள், பிரதான வீதிகள் ஊடாக பவனிவருகின்றன. இந்த ஊர்திகளில் எடுத்துவரப்படும் கரும்புலிகளின் திருவுருவப்படங்களுக்கு, பெருமளவிலான மக்கள், வீதிகளில் கூடி நின்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

## பரந்தன் ராஜனை...

நடைபெற்றுள்ளது. நேற்றைய சந்திப்பின்போது, முதற்கட்டப் பேச்சு இருவருக்குமிடையில் நடைபெற்றது.

நேற்றுப் பேசப்பட்ட விடயங்கள் குறித்து, மேலும் விரிவாக ஆராய்வதற்காக - பரந்தன் ராஜனை ஜப்பானுக்கு வரும்படியும், ஜப்பானிய அரசின் இந்தியாவுக்கான உதவித் தூதுவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

(01)

## இடைக்கால நிர்வாகம்...

கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதுபற்றி அமைசசர்கள் வினவியபோதே, விரைவில் சகல அமைச்சர்களையும் சந்தித்து விளக்கமளிப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் மற்றும் அதற்காக - அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஜப்பான் ஆகிய நாடுகளால் வழங் கப்பட்டுவருகின்ற அழுத்தங்கள் தொடர்பாகவும் பிரதமர் அப்போது விளக்கமளிப்பார் என்று அறியமுடிகிறது.

அத்தோடு, எதிர்வரும் 8 ஆம் திகதி பிரதமர் - தமிழ்க் கட்சிகளையும் சந்தித்து, இவ்விடயங்கள் தொடர்பாகப் பேசவிருப்பதாக அறியமுடிகிறது. இச்சந்திப்பு, நாடாளுமன்றக் கட்டடத்திலுள்ள பிரதமரின் அலுவலகத்தில் நடைபெறலாமெனத் தெரியவருகிறது.

## ரணிலின் சமாதான...

றுக் குழுக்கூட்டம் நேற்று பி.ப 2 மணியளவில் எம்பிலிப்பிட்டிய மகாவலி விளையாட்டரங்கில், விசேடமாக அமைக்கப்பட்டிருந்த மாபெரும் கொட்டகையில் ஆரம்பமானது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதற்குத் தலைமை வகித்தார். குழுக கூட்டத்தில் கலந்துகொண்ட பேராளர்கள், நான்கு பிரிவுகளாகப் பிரிந்து, நாட்டை சுபிட்சமான பாதைக்கு இட்டுச் செல்வதற்கான நான்கு வழிமுறைகள் குறித்து ஆராய்ந்தனர். சமாதானச் செயற்பாடுகள், சுபீட்சப் பாதையில் இலங்கையை மீட்டெடுத்தல், கட்சிக்குள் நிரந்தர அடித்தளத்தைக் கட்டியெழுப்புதல், திறந்த ஆட்சிமுறை மூலம் மக்களுக்கு உயர்வான சேவையை வழங்கல் போன்ற நான்கு தலைப்புக்களில் பேராளர்கள் கூடிக்கலந்துரையாடினர்.

இந்த நான்கு தலைப்புக்களில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து, இன்று நடைபெறும் 2 ஆம் நாள் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இந்த நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் - அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பெருமளவானோர் பங்குபற்றியிருந்தனர். நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தை முன்னிட்டு, இரத்தினபுரி நகரும், எம்பிலிப்பிட்டிய பகுதிகளும் விழாக்கோலம் பூண்டிருந்தன.

பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை

பத்திரிகை விநியோகம் செய்வதற்கு சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் - சாரதி அனுமதிப்பத்திரத்துடனும், வாகன ஆவணங்களுடனும் இன்று சனிக்கிழமை (05.07.2003) காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

நிர்வாக இயக்குநர்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

CCS
Visual Basic
Ms Office XP
Web designing
Desktop Publishing
Hardware
புதிய பிரிவுகள்
ஆரம்பம்:6&9.7.2003
குறைந்தளவு அனுமதிகள்
தனிப்பட்ட கவனிப்பு
GLOBAL VILLAGE
INDIA வின்
சர்வதேச தரம் வாய்ந்த
சான்றிதழ்
College of Computer Studies
302/1, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(சு-1158)

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1526 திகதி: 04.07.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| V | 0 | 3 | 6 | 8 | 9 | 6 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.